*76

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

8-NOV 1930

| வருஷ சந்தா | | காரியாலயம்:— |
|---|---|---|
| உள் நாடு ரூ. 7 8 0 | | No. 11, வேளாளர் தெரு, |
| புற நாடு ரூ. 9 0 0 | | புரசைபாக்கம் சென்னை. |

Vol 3] 1930 ஞு அக்டோபர் மீ 23வ [No. 42.

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 821
2. அப்பர் (பூமிப் பரிக்ஷை)
   E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 823
3. தமிழ்ப்பாடம் (நைடதம்—ஃளன்தூதுப் படலம்) 826
4. குறுந்தொகை (பாட்டு 256—275)
   K. இராமரத்நம் ஐயர் B.A. 828
5. பிரஜைகளின் கடமை (Plato's Dialogue)
   K. இராஜகோபாலன் 833
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 835
7. வர்த்தமானம் 839


## கலாநிலயம்

### பள்ளியிற் பழுத்த பழம்.

1891/26.

முன்னேற்ற மென்ற பேரால் தன்னுசை தலைகொள்ளப் பயில்விக்கு மிப் பாடசாலைக ளெங்குமிருக்கக் குற்றங்களுக்குக் குறைவுண் டாமோ. வெளிப்படுங் குற்றங்கள் வெளிப்படாத குற்றங்கள், தண்டிக்கப்படுங் குற்றங்கள் தண்டனைக் கிலக்காகாக் குற்றங்கள் இன்னவகைகளில் எவையேயாயினும், குற்றங்களனைத்திற்கு மடிப்படையா யிருப்பது ஆசை. ஒவ்வோர் வேளை, செற்றத்தாற் கொலை முதலிய குற்றங்கள் நிகழலாமாயினும் அதுவும், ஆழ்ந்து நோக்குங்கால், தன்னுசை தடைப்பட்டதால் தேக்கி எழுந்த கிளர்ச்சியா யிருக்கக் காணலாம். "தனமாதர் அம்சொற் குதலைப்புதல்வர் தரணி யில்லம் தனம் ஆதரம் செய்யும் வாழ்வு அஞ்சியே........" எனப் பிள்ளைபெருமாளையங்கார் செவ்விதினுணர்ந்து உரைத்தபடி, ஆசையுடன் பிறந்து வளர்வது பயம். இருக்கின்ற வொன்று இழக்கலாகுமோ வென்றும் விழைகின்றவொன்று வாராதொழியுமோவென்றும் நெடிதேநினைந்துநினைந்து அஞ்சுவது ஆசையுடைய நெஞ்சின்கடன். அத்தகைய அச்சத்தினின்று தன்னைக் காத்துக்கொள்ளும் நோக்கத்தால் செய்வன சில குற்றங்களாய் முடியலாம். ஆதலின், செற்றத்தால் நிகழ்வனவற்றைப் போன்றே அச்சத்தால் நேர்கின்ற குற்றங்களையும் ஆசைக்கே உரியவாக்குதல் தக்கதே.

தற்கால நாகரிகத்தி லடர்ந்து கிளைக்கு மிப் பாடசாலைகளென்னும் புதர்களில் ஆசையொடு செற்றமு மச்சமும் பதுங்கிக் கிடக்கின்றனவாதலால், குற்றங்கள் பலப்பல அவைகளினின்று புறப்பட்டுத் திரிதருமிக்கோலத்தில் யாதும் வியப்பில்லை. பேர்கள் வேறுவேறு இட்டழைத்தாலும் அந்தத்திலெல்லாம் ஆசைக்கே ஆதார மாகும்படியே நம் பாடசாலைகள் நடைபெறுந் தன்மையை நாம் இதன்முன் எடுத்துக் காட்டியிருப்பவைகளினின்று ஓர்ந்து கொண்டவர், வேண்டுதற்கதிகமாய கடுஞ்சொற்களா லிப் பாடசாலைகளை யாம் கடிகின்றோமெனக் கருதமாட்டார். இதனுண்மையைச் சோதிக்குங் குறிகள் ஒன்றிரண்டு கூறினாற் போதும். இரயிலில் போய்வருகின்றவர்களில், படித்தவர்களும் பட்டங்கள் பெற்றவர்களும், உபாத்தியாயர்களாய் இருக்கின்றவர்களுங்கூட, தம்மொடுவரும் மக்களின் வயதிற்கேற்றவாறும், தங்கள் மூட்டைகளின் நிறையின்படிக்கும் செலுத்தவேண்டிய முழுக் கட்டணத்தைச் செலுத்த மனங்கொள்வார் எத்தனைபேர். இயலுமெனின் 'இரயிலார்' கண்ணில் மண்ணைத் தூவுவதும் மாந்தர்க்கமைந்த உரிமைகளுள் ஒன்றாக நினைக்காதார் மிகச்சிலர். இது மோசமே யென்பதில் ஐயமில்லையேனும் இதனைச் சாதிப்பதால் தமக்குப் பெருமையே என்று எண்ணிக்கொள்ளும்படி அமைந்திருக்கின்ற இக்கால அவமானத்தை யாரிடத் தியம்பித்தான் ஆறுவோம். இடையிலே அகப்பட்டுக்கொண்டால் அழுங்கலாம் சிலர். எனினும், இரயில் அதிகாரியின் நிலைமைக்குத் தக்கபடி கொஞ்சமே இலஞ்சங் கொடுத்துத் தப்பிவிடுவானானால் அவன் பெருமையோ தன் கண்ணிற்கும் பிறர் கண்ணிற்கும் முன்னினு மதிகமாய்த் தோன்றலாகின்றது. இப்படியே இங்குமாத்திரமன்றி மற்ற [illegible]

இலஞ்சங்கள் கொடுப்பதும் வாங்குவதும் வல்லவராய் விளங்குமவர் பெரும்பான்மை எங்கள் பாடசாலைகளிலே பழுத்தவர்களாகவே இருக்கக் காணலாம். வர்த்தகத் துறைகளிலும் நீதிநிலயங்களிலும் 'கல்வியிலாக்கா' க்களிலும் வேறு எங்கெங்கு அமயம் வாய்க்குமோ அவ்வவ் விடங்களிலெல்லாம் ஏதேனுமோர்வகையில் இலஞ்சங்கள் ஊடாடாமல் காரியங்கள் நடவாமையை நாடோறுங் கண்டுவருகின்ற நாம், பாடசாலைகளிற் பயின்றவர்களே இலஞ்சம் கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் இணங்குகின்றனர் என்பதையும் மறவோமெனின், உண்மையான எண்ணத்தோடு இப்பாடசாலைகளின்பால் ஒருவித ஊக்கமுங் கொள்ளமாட்டோம். உரிமையில்லா ஊதியம் இலஞ்சம். இதனைக் கொடுப்போர் ஏற்போர் இருதிறத்தோரும் கூசாது துரோகங்கள் புரிகின்ற புன்மையோர். முன்னேற்றம் அடைந்துவிட்ட தங்களைப்போல் மற்றவரும் முன்னேற்றம் அடையும்வண்ணம் முயல்கின்ற சட்டசபைத் தேர்தல்களில் இலஞ்சத்திற்கு எத்துணை அகன்ற இடம் அளிக்கப்பெற்றிருக்கின்றதென்பது ஒருவருமறியா மறைபொருளொன்றன்று. இவர்களும் படித்த கும்பலிற் சேர்ந்தவர்களே. இந்நாட்டின் நிலைதான் இப்படியிருக்கின்றதென வெண்ணியொருவரும் கருத்தழிய வேண்டா. உலகெலாம் அண்ணாந்து நோக்கி அங்காந்து நிற்கும்படியான முன்னேற்றத்தை அடைந்திருக்கின்ற அமெரிக்காவின் தன்மையும் இதுபோன்றே இருக்கின்றதென்பதை முன் நாம், "வால்ட் விட்மன்" என்னும் அமெரிக்க அறிஞரது உரைகளிற் சிலவற்றை மொழிபெயர்த்துத் தந்துள தலையங்கங்களிலிருந்து எளிதில் அறிந்துகொள்ளலாம். இலஞ்சம் பொய் துரோகம் முதலியவைகள் இவ்வாறு இருக்க, விலைக்குத் தகுந்தபொருள் தரவேண்டுமென்ற கொள்கையுடைய வர்த்தகரும், கூலிக்குத் தகுந்தவேலை செய்யவேண்டும் என்ற உணர்ச்சியுடைய தொழிலாளர்களும் உத்தியோகத்தினரும் எத்தனைபேர்நடமாடக்காண்கின்றோம். வண்மையின்றி அழிந்திருக்கின்ற இவ்வாழ்க்கையின் எல்லாத் திசைகளும் உண்மையின்றி வற்கடம் சென்றிருக்கின்றன. இந்நிலையினின்று மாறி அறமெனும் ஒளியும் அருளெனும் நீரும் சொரிந்து பண்டைய வளத்தின் நலங்களை வாழ்க்கைக்களிக்க உதவாத இப்பாடசாலைகளென்னும் பேரால் எத்தனை மேடுகள் எழுந்தாலென்ன; சட்டசபைகளென்றும் வட்ட மேசைகளென்றும் எத்தனை கும்பல்கள் கூடினாலென்ன!

இவையனைத்தும் முன்னோரிடத்தில் யாம் விளக்கியுளவண்ணம் முற்றிலும் பாடசாலை சட்டசபை முதலியவைகளின் பிழையன்று. எமர்ஸன் என்பவருடைய கருத்தின்படி அவைகளெல்லாம் பொதுஜன வாழ்க்கையின் நோக்கங்களுக்கு இயைந்தவாறு அமைந்திருக்கின்றன. இந்நோக்கங்களை ஏற்று நடைபெறுகின்ற அவை, மீண்டும் அவைகளைப் பலவிதங்களில் பெருக்கிவிடுகின்றன என்பதே இப்பாடசாலை முதலியவைகளை யாம் கடிவதற்குக் காரணமாயிருக்கின்றது. நன்னிலை வாய்ந்த உன்னத நோக்கங்களின்பால் வாழ்க்கையை உய்க்க முயல்கின்ற உத்தமர் சிலருளரெனின் அவர்தம் முயற்சி யனைத்தையும் பாழாக்கும்படி இப்பாடசாலைகளும் அவைகளிற் கற்றுத்தேர்ந்தவரெனக் கருதப்படுபவர்களில் பெரும்பாலோர் செய்கைகளும் சொற்களும் நிகழவேண்டுமோ வென்பதை நினைக்குங்கால் நல்லவருள்ளம் பரிந்துமிக இரங்குமென்பதிற் சிறிது மையமில்லை.

இவ்வண்ணம் பிழையுள வாழ்க்கையால் குற்றங்கள் பல இழைக்கப்பெறும் என்பதை உன்னி, அவைகளினின்று ஜனங்களைக் காக்கவேண்டுமென்னும் கருத்தினால் அமைந்தவை நியாயஸ்தலங்களும் சிறைச்சாலைகளும் ஆகும். இவைதாமும் ஜனங்களின் அவமானத்திற்கே அடையாளங்களாகின்ற தன்மையை உணர்வது சிறிது அருமையேயாயினும், அவைகளை அமைத்துவைத்த நோக்கங்களையும், அவை நிகழும் முறைகளையும், அவைகளைச் சார்ந்து செய்யப்படும் பல காரியங்களையும் நினைத்துகொண்டு நேரே நோக்குங்கால், ஈனமுடைய கருமங்கள் எத்துணை மானமின்றிச் செய்யப்படுகின்றன வென்பது சிற்சிலர்க்கேனும் புலப்படாது போகாதெனத் துணிந்து இனி இவைகளை ஒருவாறு இங்கு ஆராயப் புகுகின்றோம்.

அவ்வாறு ஆராயப்புகு மிச் செவ்வியில் நம்முடைய உள்ளத்தில் நிலைத்திருக்கவேண்டிய நினைவுகள் ஒன்றிரண்டுள. மெய்வாழ்க்கை கைவந்த மேலோர்க்கு இம்மாநுடச் சட்டங்களும் அவைகளை நிறைவேற்றும் நியாயஸ்தலங்களும் அதிகாரிகளும் மிகை; அது கைவாராதோர்க்கும் அவைமிகையே. எனின் எற்றுக்கிவைதாம் இங்கிருக்கின்றன? வழக்குமன்றம் செல்லும் இருதிறத்தோரில் ஒருதிறத்தவர் வாய்மையை வஞ்சிக்குங் கருத்தினரென்பது வெளிப்படை. மற்றவரிற் பெரும்பாலோரும் அன்னவரே. இவ்விருதிறத்தோர்க்கும் அயலார்போல் கரிகூற வருபவரில் வாய்மையை விற்றுநிற்கும் வஞ்சகர் சிலரலர். இனித் தொழில்களிலெல்லாம் உயர்ந்ததெனக் கருதப்படும் இந் நியாயவாதத் தொழிலுடையவர்களோ வாங்கிய கூலிக்குத் தம் வாக்கின் வாய்மையையே எக்காலும் விற்கின்றாரென் றெண்ணவோ இடமில்லை. நீதியை நிலைநிறுத்தும் நோக்கமல்லால் பிறிதொன்றறியாது தம்மைத் துறந்துநிற்கும் உத்தமர்களாகவே நீதிபதிகள் எல்லோரும் வாய்த்திருக்குமொரு பாக்கியத்தை இவ்வுலகஞ் செய்திலது. பொருள்பற்றிய வழக்கிற்குரிய இவை குற்றங்களைப்பற்றிய வழக்கிற்கும் ஒக்கும். இத்துணை இழிவுகள் இவைகளைச் சூழ்ந்திருந்தும், நாளுக்குநாள் வழக்குக்கள்தாம் வளர்ந்துகொண்டு வருகின்றனவேயன்றிக் குறைந்தபாடில்லை. வழக்கு வளரவளரச் ஜனங்களிடை வாய்மை தேய்ந்துகொண்டு வருகின்றதென்பது நிச்சயம். குற்றங்கள் அதிகமாகவாகக் குணம் குறையலாகின்றதென்பதை உணர்வது அருமையன்று. இந்நிலைதான் வெள்ளிடைமலையாய் விளங்கிநிற்கவும், வழக்காளிகள் தொகையும் குற்றவாளிகள் தொகையும் குறைவதற்குரிய முயற்சியொன்றும் மேற்கொள்ளாமல் வழக்குமன்றங்களிலேயே மீண்டும்மீண்டும் ஏன் இம்மாந்தர் உழன்று வருகின்றனர்? இக்காலக் கல்வியின் வளர்ச்சியால் இவை குறையுமென்பதற் கில்லை. வேண்டிய அளவு கல்வி வளர்ந்துள பிறநாடுகளில் வழக்குங் குற்றங்களும் குறைவடையக் காண்கிலம். பள்ளிக்கூடங்களில் பழுத்தவர் பலர் இவ்விழுக்குக்களில் ஈடுபட்டிருக்கக் காண்கின்றோமே!



# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

## 13. பூமிப் பரிட்சை.

[811-வது பக்கத்தொடர்ச்சி]

### (ii) பூமியின் ஏற்றமும் அதன் காரணங்களும்

I. பூமியே பல நன்மைகளுக்கு அடிப்படை.

எக்காலத்திலும் எந்நாட்டிலும் பூமியையே சிறந்த பொருளாக மாந்தர் கொண்டாடினர். இக்காலத்திலும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வோர், மற்றோர்
(அவரைத்) தொழுதுண்டு பின்செல் பவர்"

என்னும் திருவள்ளுவர் வாக்குப் பொய்க்கவில்லை. வேளாண்மையென்பது வேளாளருக்குத்தான் பொருந்தியதென்பது, நகரவாசிகளையும் நாட்டுவாசிகளையும் அன்னதானத்திற் சீர்தூக்கின் செவ்வனே விளங்கும். இதனைத் திருநாவுக்கரசுநாயனார் திருமறுமாற்றத் திருத்தாண்டகத்தில் குறிப்பிடுவதைக் காண்க:—

அகலிடமே யிடமாக வூர்க டோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள் பொய்யன்று மெய்யே
யிகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 2.

என்றும், மற்றோரிடத்தில்,

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநா கங்கள் வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப் படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயனை யாறனாரே.

திருவையாறு - திருநேரிசை 10.

எனவே வேளாண்மையாகிய ஈகைத்தன்மை இன்றேல் வேளாளனென்னும் பேர் பொருந்தா தாதலானும் "வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்னும் ஆன்றோர் மொழியாலும் பூமி உழுதுண்டு வாழ்வோனே இல்லறம் பழுதின்றி நடத்தக் கூடியவனாதலாலும், மறுமைப்பயனை நோக்குங் காலையும், பூமி சிறந்த பொருளாகும்.

சீவர்களில் வீட்டை யடைவதற்கு அருகராமென அப்பர் மூவகையினரை மொழிவர். அவர் யாவரெனின், மண்ணையே ஸ்திரமாக நம்பி வாழ்நாள் செலுத்துபவர் ஒருவகையோர் - மற்றொரு வகையோர் நியமம் தவறாத வேதியர். மூன்றாவது, இவ்வுலகத்தில் புண்ணிய புருடராய் வசித்துச் சுவர்க்கத்தில் வாழும் தேவர்கள். சிவபெருமானைக் கைக்கிளைத் துறையில் பாடும் அப்பர் இவரைச் சிறப்பித்து விளக்குவது காண்க:—

மண்பொருந்தி வாழ்பவர்க்கு மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும் பழனஞ்சே ரப்பனையென்
கண்பொருந்தும் போழ்தத்தும் கைவிடநான் கடவேனோ?

திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம் 5.

எனவே "மாதீர்த்த வேதியர்க்கும்", "விண் பொருந்து தேவர்க்கும்" சமமாகவும், இன்றேல் முன்னாகவும் எடுக்கப்பட்டவர்கள் "மண்பொருந்தி வாழ்வோர்" ஆகும். இதற்கத்தாட்சியாய் இளையான்றன் குடிமாறநாயனார் சரித்திரத்தையும் எடுத்துக்காட்டலாகும். மண்ணே இவ்வுலகமென்பதற்குப் பொருளாய் அப்பரும் அம்மொழியை உபயோகிப்பதால், எல்லா நற்குணங்களையும் வளரச் செய்விப்பது மண்ணென்றும், அதில் துன்பம் விளைவதும் விளைத்தலும் கர்மவசமென்றும் நாம் எண்ணவேண்டு மன்றோ?

மாச்செய்த குரம்பை தன்னை
மண்ணிடை மயக்க மெய்து
நாச்செய்த நாலு மைந்து
நல்லன வாய்தல் வைத்துக்
காச்செய்த காயந் தன்னுள்
நித்தலு மைவர் வந்து
கோச்செய்து குமைக்க வாற்றேன்
கோவல்வீ ரட்ட னீரே.

திருநேரிசை - திருக்கோவல் வீரட்டானம் 6.

II நிலவளம்-அமைதி

நீர்வளம், நிலவளம், குடிவளம் என்னும் மூவகை மாட்சிமையைக்குறித்துப்புலவர்பாடும் பதிகங்கள்எங்குங் காணலாம். நிலவளம் பொருந்த * நீர் வளமும் குடிவளமும் † வேண்டும். அவற்றுள் குடிவளமே முன்னதாம்.

குடிவளத்தின் அடையாளங்கள்.

(1) கோடிமாட நீ டெருவு ‡ கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டி யூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளு
நலமாகு மொற்றியூ ரொற்றி யாகப்
[கற்றோர் சேர்வதும் ஒருவகைக் குடிவளமே.]

* வண்டலொடு மணற் கொணரும் பொன்னி நன்னீர் வலஞ்சுழியார்...—திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 9.

† குலாவெண் டலைமாலை யென்பு பூண்டு,
குளிர் கொன்றைத் தாரணிந்து கொல்லே றேறிக்
கலாவெண் களிற்றுரிவை போர்வை மூடி,
கையோ டனலேந்திக் காடு றைவார்
நிலா வெண் மதியுரிஞ்ச நீண்டமாட,
நிறைவயல் சூழ் நெய்த்தான மேய செல்வர்
புலால் வெண் டலையேந்திப் பூதஞ் சூழப்
புலியூர்சிற் றம்பலமே புக்கார் தாமே.

கோயில் புக்க திருத்தாண்டகம் 8.

‡ பலி கெழு செம்மலர் சாலப் பாடலோ டாடல றாத
கலிகெழு வீதிக லந்த கார்வயல் சூழ்கடம் பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தா னொண்ணுத லாளுமை கேள்வன்
புலியத ளாடையி னன்றன் புனைகழல் போற்றல் பொருளே.

சம்பந்தர்.

படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமும் கைவிட் டிந்நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே.
திருப்புறம்பயம்—திருத்தாண்டகம் 1.

[குறிப்பு:—கொடியாடு பருமாடம் குடிவளத்தைக் காட்டும்]

(2) உற்றா ராயுற வாகி யுயிர்க் கெலாம்
பெற்றா ராய பிரானா ருறை விடம்
முற்றார் மும்மதி லெய்த முதல்வனார்
கற்றார் சேர்கடம் பூர்கரக் கோயிலே.
திருக்கடம்பூர்—திருக்குறுந்தொகை 8.

(3) தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களரும் கார்கடம் பூர்க்கரக் கோயிலே.
தளரும் வாளர வத்தொடு தண்மதி
வளரும் பொற்சடை யார்க்கிட மாவது
கிளரும் பேரொலிக் கின்னரம் பாட்டறாக்
களரி யார்க்கடம் பூர்க்கரக் கோயிலே!
திருக்கடம்பூர் - திருக்குறுந்தொகை 1 & 7.

[ஒரு தலத்தில் பாடிய இரண்டு திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்களிலும் கூறிய "கிளரும் பேரொலி கின்னரம்" பாடலும் ஆடலும் குடிவளத்தை விளக்கும்]

(4) அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ
அழல்விழித்த கண்ணானை யமரர் கோனை
வென்றிமிகு காலனுயிர் பொன்றி வீழ
விளங்குதிரு வடியெடுத்த விகிர்தன் றன்னை
ஒன்றியசீ ரிருபிறப்பர் முத்தீ யோம்பு
* முயர்புகழ்நான் மறையோமாம் புலியூர் நாளும்
தென்றல்மலி வடதளியெஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.
திருவோமாம்புலியூர் - திருத்தாண்டகம் 4.

[முத்தீ யோம்பலும் மறைவளர்த்தலும் †ஒருவகைக் குடிவளமே]

(5) தோற்றுங் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையாற்
கேற்றம் கோயில்கண் டீரிளங் கோயிலே.
திருமீயச்சூர் - திருக்குறுந்தொகை 1.

தேக்குந் திமிலும் பலவுஞ் சுமந்துந்திப்
போக்கிப் புறம்பூசல டிப்பவ ருமாய்
ஆர்க்கும் திரைக்கா விரிக்கோலக் கரைமேல்
ஏற்க விருந்தான்ற னிடைமரு தீதோ. சம்பந்தர்.

[கட்டடங்கள் கட்டுவதும் *, அதற்குரிய இறக்குமதி வியாபாரமும் குடியின் மாட்சிமையைக் காட்டுமன்றோ?]

(6) மின்னி னுண்ணிடைக் கன்னியர் மிக்கெங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி யடிதொழ
மன்னி நான்மறை யோடுபல் கீதமும்
பன்னி னாரவர் பாலைத்து றையரே.

* * * *

சித்தர் கன்னியர் தேவர்க டானவர்
பித்தர் நான்மறை வேதியர் பேணிய
அத்தனே நமை யாளுடை யாயெனும்
பத்தர்கட் கன்பர் பாலைத்து றையரே.
விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறு
மண்ணி னார்மற வாதுசி வாயவென்
றெண்ணி னார்க்கிட மாமெழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத்து றையரே.
திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை 3, 5, 6,

[மக்களி லிருபாலரும் கடவுள் வழிபாட்டில் நிற்பது நல்குரவற்ற குடியின் இலக்கணமாம்]

இவ்வாறு ஆங்காங்கு அப்பர் பாசுரங்களிற் குடிவளம் காட்டும் அடையாளங்களைச் சிறந்த திருப்பதிகளிற் காண்கின்றோம். †சம்பந்தர் சுந்தரர் தேவாரங்களில் அப்பதிகளின் வளம் கூறப்பட்டிருப்பதால், அப்பர் கூறியது கண்டனவேயன்றி உபசாரவழக்கொன்றுமில்லையெனத் தெளியலாகும். இனி நீர்வளம் எவ்வாறு குறிப்பிடப்பட்டதென ஆராய்வோம்.

நீர்வளம் மூவகையில் நேரும். அவையாவன:—

1. ஆறு ஓடைமுதலியன ‡பாய்ச்சும் நீரால் பயிர்நிலங்கள் வளம்பெறுவது. காவிரியும் அதன் கிளைகளுமான கொள்ளிடம் மண்ணி அரிசில் முதலிய ஆறுகள் ஓடும் பிரதேசங்களிலே இத்தகைய மாட்சிமை காணலாம்.

(2) ஓட்டமின்றி நிலையாய் நிற்கும் ஏரி குளம் முதலியன நிறைந்திருப்பதாலும் நிலத்திற் செல்வம் பெருக்கும்.

* தலையொரு பத்துந் தடக்கை திரட்டித்
தானுடை யரக்கனொண் கயிலை
அலைவது செய்த வவன்றிறல்
கெடுத்த வாதியாருறைவிடம் வினவில்
மலையென வோங்கு மாளிகை நிலவு
மாமதின் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே. சம்பந்தர்.

† செருக்குவாய் பைங்கண்வெள் ளரவரையி னானைத்
தேவர்கள்சூ ளாமணியைச் செங்கண்விடை யானை
முருக்குவாய் மலரொக்குந் திருமேனி யானை,
முன்னிலையாய் மூழுலக மாயபெரு மானை
இருக்குவா யந்தணர்க ளெழுபிறப்பு ளெங்கும்,
வேள்விநிறைந் திருநீதியும் வழங்கு நகரெங்கும்
கருக்குவாய் பெண்ணையொடு தெங்கமலி சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே. சுந்தரர்.

* நடையுடைய நல்லெருதொன் றூர்வான் றன்னை;
ஞானப் பெருங்கடலை நல்லூர் மேய
படையுடைய மழுவாளொன் றேந்தி னானைப்
பன்மையே பேசும் படிறன் றன்னை
மடையிடையே வாளை யுகளும் பொய்கை
மருகல்வாய்ச் சோதி மணிகண் டனைக்
கடையுடைய நெடுமாட மோங்கு நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே.
திருநாகைக் காரோணம் - திருத்தாண்டகம் 5.

† திருப்புன்கூர் - திருநீடூர்—திருத்தாண்டகத்தை நோக்குக.

‡ தீர்த்தப் புனற் கெடில வீரட்டமும் திருக்
கோவில் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
கார்த்தநவி வீழ்சுனைநீ ரண்ணாமலை
யறையணிநல் லூரு மரனெறியும்
ஏத்துமின் கணீரேத்த நின்ற வீச
ரிடைமருதின் னம்பரே கம்பமும்
காத்தயங்கு சோலை கயிலா யமும்;
கண்ணுத லான்றன் னுடைய காப்புக்களே.
திருவீரட்டானம் - காப்புத் திருத்தாண்டகம் 2.



(3) காலமழை பெய்வதால் உண்டாகும் சதுப்பு. இவையாவும் தேவாரத்தில் ஒவ்வொரு போக்காய் விநோதமான கலையில் விளக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு விளக்கப்பட்ட இயற்கைத் தோற்றங்கள் ஓவியத்திற்குத் தக்கமாதிரிகளாம். அவற்றை முறையே சற்று நோக்கலாம் :—

ஆற்றுப் பாய்ச்சலும் நிலவளமும்.

காவிரி.

கட்டா றேகழி காவிரி பாய்வயல்
கோட்டா றேபுன லாறு குரக்குக்கா
முட்ட றாவடி யேத்த முயல்பவர்க்
கிட்ட றாவிட ரோட வெடுக்குமே.
கைய னைத்துங் கலந்தெழு காவிரி
செய்ய னைத்திலுஞ் சென்றிடும் செம்புனல்
கொய்ய னைத்துங் கொணருங் குரக்குக்கா
ஐயனைத் தொழுவார்க் கல்ல லில்லையே.
திருக்குரக்குக்கா—திருக்குறுந்தொகை 3.

கொள்ளிடம்.

விடையரவக் கொடியேந்தும் விண்ணவர்தங் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங் காணவரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையன்மட வார்கள்
உடையவிழக் குழலவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்க ளுந்திவருங் கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளை களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டுதொழு தேனே.
சுந்தரர்.

அரிசில்.

முத்தா ரும்புனன் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரன்னடி போற்றியென் பாரெலாம்
பொய்த்தா ரும்புல னைந்தொடு புல்கிய
மைத்தா ரும்வினை மாற்றவும் வல்லரே.
திருஅரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை 1.

பெண்ணை.

உரிந்தவுடை யார்துவரா லுடம்பை மூடி
யுழிதருமவ் வூமரவ ருணரா வண்ணம்
பரிந்தவன்காண் பனிவரைமீப் டண்ட மெல்லாம்
பரித்துடனே நிரந்துவரு பால்நீர்ப் பெண்ணை
நிரந்துவரு மிருகரையுந் தடவா வோடி
நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.
திருமுண்டீச்சரம்- திருத்தாண்டகம் 8.

மாதார் மயிற் பீலியும் வெண்ணுரை யுந்தித்
தாதாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணை வடபால்
போதார்ந்தன பொய்கைகள் சூழுந் துறையூர்
நாதா வுனைவேண்டிக் கொண்டேன் தவநெறியே.
சுந்தரர்.

சிற்றாறு. (கொங்குநாட்டு நதி)

கொங்கார் மலர்க்கொன் றையந்தா ரவனே!
கொடுகொட் டியோர்வீ ணையுடை யவனே!
பொங்கா டரவும் புனலுஞ் சடைமேற்
பொதியும் புனிதா! புனஞ்சூழ்ந் தழகார்
துங்கார் புனலுட் பெய்து கொண்டு
மண்டித்திளைத் தெற்றுசிற்றா றதன்கீழ்க்கரைமேல்
வெங்கார் வயல்சூழ் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா! வடியே னையும்வேண் டுதியே?
சுந்தரர்.

நிவா.

துன்ன வாடையொன் றுடுத்தித்
தூயவெண் ணீற்றின வாகி
உன்னி னைபவர்க் கல்லா
லொன்றுங்கை கூடுவ தன்றாய்ப்
பொன்னு மாமணி யுந்திப்
பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயி
லரத்துறை யடிகட மருளே.
சம்பந்தர்.

புனலொப் பானைப் பொருந்தார் தம்மையே
மினலொப் பானை விண்ணோரு மறிகிலா
அனலொப் பானை யரத்துறை மேவிய
கனலொப் பானைக் கண்டீர்நாந் தொழுவதே.
திருநெல்வாயிலரத்துறை - திருக்குறுந்தொகை 7.

ஏலம் மிலவங்க மெழிற் கனகம்
மிகவுந்தி வரும் நிவவின் கரைமேல்
நிலவும் மயிலா ரவர்தாம் பயிலு
நெல்வாயி லரத்துறை யாயொரு நெல்
வாலூன்ற வருந்து முடம்பிதனை
மகிழா தழகா வலந்தே னினியான்
ஆலந் நிழலி லமர்ந்தா யமரா வடியே
னுய்யப் போவதோர் சூழல் சொல்லே.
சம்பந்தர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்


டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.
டிப்போ, பம்பாய்
கல்கத்தா


# தமிழ்ப் பாடம் 143.

[815-வது பக்கத் தொடர்ச்சி]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

என்றிவன் புகன்ற மாற்ற
மிருசெவி வெதுப்பக் கேட்டு
நின்றுளம் பதைப்ப வாடி
நெட்டுயிர்ப் போடுஞ் சோரு
மன்றலங் குழலி னாடன்
மதர்நெடுங் கயற்க ணாலி
குன்றெனப் பணைத்து வீங்குங்
குவிமுலை வார்ந்த வன்றே. 72.

மாதுகண் பனிப்ப நோக்கித்
தோழியர் மாழாந் துள்ளம்
பேதுற வெய்தி நின்ற
பெய்வளைத் துயர மெல்லாந்
தூதுநாம் விடுத்த வன்னஞ்
சொல்லிய தென்னின் சற்று
மாதர மின்றி யிவ்வா
றுரைக்குமோ வரச னென்றார். 73.

**உரை:**—என்று - என்று, இவன் - இந்த நளன், புகன்ற மாற்றம் - சொன்ன வார்த்தைகளை, இரு செவி - தன் இரண்டு காதுகளையும், வெதுப்ப - தொதிக்கச்செய்யும்படி, கேட்டுநின்று - கேட்டு, உளம் - தன் மனம், பதைப்ப - பதைக்கும்படி, வாடி - வாட்டமடைந்து, நெட்டுயிர்ப்போடும் - பெருமூச்சு விட்டவளாய், சோரும் - சோர்கின்ற, மன்றல் - வாசனை பொருந்திய, அம் - அழகிய, குழலினாள் தன் - கூந்தலையுடைய தமயந்தியின், மதர் - மதர்த்த, நெடும் - பெரிய, கயல் கண் - கயல் போன்ற கண்களிலிருந்து வருகின்ற, ஆலி - நீர்த்துளிகள், குன்று என - மலையைப்போல, பணைத்து - பெருத்து, வீங்கும் - பூரிக்கின்ற, குவிமுலை - குவிந்த முலைகளின் மேல், வார்ந்த - ஒழுகின—(அன்றே - அசை).

விரிவுரை:—தான் வைத்திருந்த காதலையெல்லாம் இவ்வாறு நளன் பிறர்கை காட்டிக்கொடுத்துவிட்டானே யென்று அலமந்து அழுகின்றாள் பேதைத் தமயந்தி. வாடினாள், சோர்ந்தாள், மூள்கின்ற நெடுந் துயரால் பெருமூச்சு விடுகின்றாள். கள கள வென அவள் கயற்கண் ஆலி உதிர்கின்றன. மேகமென அவள் கண்கள் பொழிந்தனவெனின் அதனை மலையென அவள் முலைகள் ஏந்தின. இமையவர்க்குத் தூதனென வருவானோ இக்காதலன்......—இந்த விபரீதச் செய்திக்கு ஏதோ காரணம் இருத்தல் வேண்டும்........தன்பால் காதலின்மையால் இஃதவன் கழறினானல்லன் என்று ஊகிக்குந் திறமை அம் மடவாளுக்கில்லை. இந்நிலையில் நின்ற தமயந்தியைப் புகழேந்திப்புலவர்,

உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போல்—பிள்ளை
புள்ளரிக்கு நாடன் திருமடந்தை பூவாளி [மீன்
உள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர்.

என்று நளவெண்பாவில் வருணித்திருக்கின்ற செய்யுள் நம் வாசகர்களது நினைவில் இருக்கலாம். ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமொரு வஞ்சனையால் பேர்பெற்ற கொக்கும், பிள்ளை மீன்களைக் கொத்திவிடுகின்ற விதர்ப்ப நாட்டரசன் மகளான தமயந்தி என்றதால் வஞ்சனையற்ற அவள் மடமை காட்டப்பெற்ற அழகை அங்குக்கண்டோம்.

குறிப்பு:—வார்ந்த, என்பது இங்குப் பெயரெச்சமன்று—பலவின்பால் வினைமுற்று. வார்ந்தன என்னுமுருவத்தில் சாதாரணமாய் இது வழங்கப்பெறும்.

**உரை:**—மாது - தமயந்தியானவள், கண் பனிப்ப - கண்ணீர் சொரிவதை, தோழியர்- தோழிமார், நோக்கி - பார்த்து, உள்ளம் - மனம், மாழாந்து - கலங்கி, "பேதுறவு - கலக்கத்தை, எய்தி நின்ற-அடைந்திருக்கின்ற இந்த, பெய்வளை - அணிந்திருக்கின்ற வளையல்களையுடைய தமயந்தியின், துயரம் எல்லாம்-காம வேதனைகளையெல்லாம், நாம் தூது விடுத்த அன்னம் - நாம் தூதாக அனுப்பிய அவ்வன்னப்பறவை, சொல்லியது என்னின் - சொல்லியிருப்பது உண்மையானால், அரசன் - இந்த நளன், சற்றும் - சிறிதும், ஆதரம் இன்றி - ஆசை இல்லாமல், இவ்வாறு - இப்படி, உரைக்குமோ - சொல்வானோ", என்றார் - என்று கூறினார்.

விரிவுரை:—காதலுக்குத் துரோகஞ் செய்வான் நளன் என்று கருதமாட்டாத் தோழியர், அன்னத்தின் வாய்மையைத்தான் ஐயிர்க்கத் தலைப்படுகின்றனர். அன்னமே முன்வந்து உற்றதை இனிச்சொல்வதற்கு இஃது ஏற்றதோர் தோற்றுவாயாகின்றது.

குறிப்பு:—மாது + கண் = மாதுகண்:— இது எழுவாய்த் தொடராகையால் வருமொழிமுதல் வல்லின மெய் மிகவில்லை. அல்லது, இதனை 'மாதினுடைய கண்' என விரியவல்ல ஆறும்வேற்றுமைத் தொகையாய்க் கொண்டாலும், நிலைமொழி உயர்திணையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை என்றுணர வேண்டும் (      ).

கண் + பனிப்ப = கண்பனிப்ப :—இதற்கு விதி இன்னுங் கூறவில்லை.

பனிப்ப + நோக்கி = பனிப்பநோக்கி:—வருமொழிமுதலில் இருப்பது மெல்லின மெய்யாதலால் அது நிலைமொழியீற்று உயிரோடு யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தது (      ).

நோக்கி + தோழியர் = நோக்கித்தோழியர்:-இது வினையெச்சத்தொடராகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது (      )

தோழியர் + மாழாந்து = தோழியர் மாழாந்து :—நிலைமொழியீற்றில் ரகரமெய்யிருப்பினும், வருமொழி முதலில் வந்திருப்பது மெல்லினமெய்யாதலால் அவை யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தன (      )

மாழாந்து + உள்ளம் = மாழாந்துள்ளம்.—வருமொழி முதலுயிர், நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டுநின்ற மெய்யின்மேல் ஏறிப்புணர்ந்தது (   ).

உள்ளம் + பேதுறவு = உள்ளம் பேதுறவு:— ஆறும் வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள், பண்புத் தொகை, உவமத் தொகை ஆகிய இத்தொடர்களில் வருமொழிமுதலில் உயிர், அல்லது வல்லினமெய், அல்லது மெல்லினமெய், அல்லது இடையின மெய், ஆகிய இவைகளில் எது வரினும் நிலைமொழியீற்று மகரமெய் கெடும் என்றும்; மற்றத் தொடர்களில், வருமொழி முதலில் இடையின மெய்யும் உயிரும் வந்தால் நிலைமொழியீற்று மகரமெய் கெடாதென்றும்; மெல்லினமெய் வருமொழியின் முதலில் வந்தால் கெடும் என்றும்; வல்லின மெய் வருமொழிமுதலில் வருமாயின் அந்த மற்றத் தொடர்களில் நிலைமொழி யீற்று மகரமெய் கெடாமல் அவ்வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்தாய்த் திரியுமென்றும் முன்னர்க் கூறினோம் (   ) வருமொழி முதலில் வரக்கூடிய வல்லினமெய்களில் பகரமெய் வருமானால் யாதாகும் என்பது சிறிதிங்குக் கவனிக்கத்தக்கது. படம் + பார்த்தேன் = படம் பார்த்தேன், மனம் + புழுங்கியது:—மனம்புழுங்கியது, ஓடும் + பிள்ளை = ஓடும்பிள்ளை, என வேற்றுமைத்தொகை, எழுவாய்த்தொடர், பெயரெச்சத்தொடர் முதலிய தொடர்களில் நிலைமொழியீற்று மகரமெய் வருமொழிமுதல் பகர மெய்யோடு புணரும்போது அவ்வெழுத்துக்கள் யாதும் விகாரமின்றி இயல்பாய் நிற்கின்றன. எனினும், படம் + கண்டேன் = படங்கண்டேன், நிலம் சேர்ந்தான் = நிலஞ்சேர்ந்தான், குதிக்கும் + தவளை, = குதிக்குந்தவளை, என, மற்ற வல்லினமெய்கள் வருமொழி முதலில் வருமானால் நிலைமொழியீற்று மகரமெய் அவைகளுக்கு இனமான ககர ஞகர நகர மெய்களாகத் திரிவதுபோல், பகரம் வரினும் நிலைமொழி யீற்று மகரமெய் அப்பகரத்திற்கு இனமான மகர மெய்யாய்த் திரிந்து நிற்கின்றது என்றுங் கூறலாம். இதன்படி உள்ளம் + பேதுறவு = உள்ளம் பேதுறவு என்று இயல்பாய்ப் புணர்ந்ததென்றேனும், அல்லது, நிலைமொழி யீற்றில், புணர்ந்தபின் நிற்கும் மகரமெய் முன்னிருந்த மகரமெய்யின்றிப் பகரத்திற் கினமாய்த் திரிந்தாகிய மெய்யென்றேனுங் கொள்ளல் கூடும். பகரத்திற்கு இன மெல்லெழுத்து மகரமே யாதலால், நிலைமொழி யீற்று மகரமெய் தானேயாய்த் திரிந்து நிற்கின்றதெனக் கூறுவது இயல்வதாகின்றது.

பேதுறவு + எய்தி = பேதுறவெய்தி:-வகர மெய்யின் மேல் ஏறிய நிலைமொழியீற்று முற்றியலுகரங் கெட வருமொழி முதலுயிர், நின்ற மெய்யின்மே லேறியது. (      ).

எய்தி + நின்ற = எய்திநின்ற:—வருமொழி முதலில் இருப்பது மெல்லின மெய்யாதலால், நிலைமொழி யீற்று உயிரோடு யாதும் விகாரமின்றிப் புணர்ந்தது (      ).

நின்ற பெய்வளை = நின்றபெய்வளை.—பெயரெச்சத் தொடராகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை (      ).

பெய் + வளை = பெய்வளை:—நிலைமொழி வருமொழிகளை நோக்குமளவில் இது வினைத்தொகையாயிருந்து, 'உடைய தமயந்தி' என்ற சொற்களும் அதன் இறுதியில் தொக்கியிருத்தலால்இது,வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை (      ). இத்தொடரை ஒரு சொல்லாகப் பாவிக்க வேண்டும்.

பெய்வளை + துயரம் = பெய்வளைத் துயரம் :—இது ஆறும் வேற்றுமைத் தொகை. நிலைமொழியாகக் கருதவேண்டிய 'பெய்வளை' என்னுந் தொடர் பொருளால் உயர்திணையாயினும் 'வளை' என்னும் அஃறிணைச்சொல் லமைந்திருப்பதால் ஆறும் வேற்றுமையினும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது.

துயரம் + எல்லாம் = துயரமெல்லாம்: —நிலைமொழி யீற்று மெய்யின்மேல் வருமொழி முதலுயிர் ஏறியது.

எல்லாம் + தூது = எல்லாந்தூது:—இரண்டாம் வேற்றுமைத் தொகையாகையால் வருமொழிமுதல் வல்லின மெய்வர நிலைமொழியீற்று மகரமெய் அவ் வல்லின மெய்க்கு இனமான மெல்லின மெய்யாய்த் திரிந்தது (      ).

தூது + நாம் = தூதுநாம்:-நிலைமொழி யீற்றுஉயிரோடு வருமொழிமுதல் மெல்லினமெய் இயல்பாய்ப் புணர்ந்தது (      ).

நாம் + விடுத்த = நாம் விடுத்த:-எழுவாய்த் தொடராதலால் வருமொழி முதலில் இடையினமெய் வர நிலைமொழி யீற்று மகரமெய் கெடவில்லை. (      ). மேலும், நிலைமொழி நாம் யாம் அனைய சொற்களாயிருக்குமாயின் எத்தொடரினும் அவ்வீற்று மகர மெய் கெடாது. (      ).

விடுத்த + அன்னம் = விடுத்த வன்னம்:—நிலைமொழி யீற்றில் அகர உயிர் இருப்பதால் வருமொழி முதலில் உயிர் வர, வகர உடம்படுமெய் வரலாயிற்று. (      ).

அன்னம் + சொல்லியது = அன்னஞ் சொல்லியது:—எழுவாய்த் தொடராகையால் நிலைமொழி யீற்று மகரமெய், வருமொழி முதலிலுள்ள ச் என்னும் வல்லினமெய்க்கு இனமான ஞ் என்னும் மெல்லின மெய்யாய்த் திரிந்தது. (      )

சொல்லியது + என்னின் = சொல்லிய தென்னின்:—நிலைமொழி யீற்றுக் குற்றியலுகரங் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (      ).

என்னின் + சற்றும் = என்னின் சற்றும்:—இன்னும் விதி கூறவில்லை.

சற்றும் + ஆதரம் = சற்றுமாதரம் = நிலைமொழி யீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (      )

ஆதரம் + இன்றி = ஆதரமின்றி:—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (      )

இன்றி + இவ்வாறு = இன்றியிவ்வாறு :—நிலைமொழி யிறுதியில் இகர உயிர் இருப்பதால் வருமொழி முதலில் உயிர்வர யகர உடம்படுமெய் பெற்றது. (      )

இவ்வாறு + உரைக்குமோ = இவ்வாறுரைக்குமோ :—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (      ).

உரைக்குமோ + அரசன் = உரைக்குமோ வரசன்:—நிலைமொழி யீற்றில் ஓகார உயிர் நிற்பதால், வருமொழி முதலில் உயிர்வர வகர உடம்படுமெய் பெற்றது (      ).

= அரசன் + என்றார் அரசனென்றார் :— நிலைமொழி யீற்று மெய்யின்மேல் வருமொழி முதலுயிர் ஏறியது (      ).

# குறுந்தொகை

[815-வது பக்கத் தொடர்ச்சி]

256

[பாலை]

பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனைத் தோழி செல வழுங்குவித்தது.

'மணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகைப்
பிணையறல் மென்கொம்பு பிணையொடு மார்ந்த
மானே றுகளுங் கானம் பின்பட
விரலம் படீஇ வருகுவர்; அவரைத்
தாங்க லொல்லுமோ பூங்குழை யோய்'எனச்
சொல்லா முன்னர் நில்லா வாகி
நீர்விலங் கழித லானா
தேர்விலங் கினவால், தேர், இவள் கண்ணே.

(உரை). 'மரகத மணியின் கதிர்கள் நீண்டு பரந்தாலன்ன பெரிய கொடியாய் வளர்ந்த அறுகம் புல்லைத் தான் விரும்பும் பிணையோடு தின்ற அறல்போன்ற மென்கொம்பையுடைய ஆண்மான் களித்துத் துள்ளி விளையாடும் முல்லைக்கானம் பிற்படச் சென்று, சிறந்த பொருளை ஈட்டி (விரைய)மீள்வர் காதலர்; அதுகாறும்,பொலிவுற்றகுழையை அணிந்தவளே, நீ பொறுத்திருக்ககிற்றியோ ?' என்று நான் கேட்டவுடனே இவள்கண்கள் அடங்காமல் நீர் வெளிப்பட்டுக் கெடுதலமையாது அழகு நீங்கின; இதனை நீ தெளிவாயாக.

பிணை - விருப்பத்தை உணர்த்தும் உரிச்சொல். 'பிணையும் பேணும் பெட்பின் பொருள' (உரியியல்-38) என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிக. அறல் - அறுத்தல், அறுப்புவாய். 'பிணை' யென்பதை பின்னுள்ள 'பிணை' யோடும், 'மென்கொம்பு' என்பதை 'மானேறு' என்பதனோடும் கூட்டுக. விரலம் (அன்மொழித்தொகை) விசேஷமான, மேலான நலத்தைத்தரும் பொருள்; வி - மேன்மை. படீஇ - பட்டு, உண்டாக்கி, சம்பாதித்து. அவரை - அவ்வரை (விகாரம்) அவ்வளவும், அதுகாறும். விலங்கழிதல் - (விகாரம்) விலங்கி அழிதல்; விலங்கி - கண்ணின் நீங்கி, வெளிப்பட்டு. ஏர் - அழகு, விலங்கின - விலகின.

'பிணைதல்,' 'பிணையொடு மமர்ந்த', 'ஆனுத்தேர்', என்ற பாடம் இனிது பொருள் பயக்க வில்லை. 'வருவதும்' 'தெரிகண்ணே' என்பன.பாடபேதம்.

---

உறையூர்ச் சிறுகந்தனார்] 257 [குறிஞ்சி

வரைவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

வேரு முதலுங் கோடு மொராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வருஉம்,
அகலினு மகலா தாகி
இகலும் தோழி, நங் காமத்துப் பகையே.

(உரை). வேரும், அடிமரமும், கிளையும் ஒருங்கே தொடுத்தாற்போன்றதும், தொங்கும்படி தொடுக்கப்பட்டுக் கீழே தாழ்த்தாற்போன்றதுமான, விரும்பப்படும் பழங்களை ஏந்திய பலாமரங்களையுடைய, நிறைந்த ஆரவாரத்தோடு கூடிய மலைக்குத் தலைவனான தலைமகன் வரும்போதெல்லாம் நமது காமமாகிய பகை உடன் வரும்; ஆனால் அவன் போகும்போது கூடப் போகாமல் இங்கேயே இருந்து நம்முடன் போர் புரிந்து வருத்தாநிற்கும். (இதற்குப் பரிகாரம் ஒன்றும் இலதோ ?)

தொடரி - தொடுத்து, தொடுக்கப்பட்டு. வீழ் - விரும்பும், விரும்பப்படும். கோள் - பழம். 'ஆர்கலி', 'வெற்பன்' என்பதிலுள்ள வெற்புக்கு அடைமொழி. காமத்துப் பகை - (பண்புத்தொகை) காமமாகிய பகை; 'அத்து', வேண்டா வழிச்சாரியை.

---

பரணர்] 258 [மருதம்

பரத்தையிற் பிரிந்து மீண்டு தன்னை வாயில் வேண்டிய தலைமகனுக்குத் தோழி வாயில்மறுத்து உரைத்தது.

வாரலெஞ்சேரி, தாரனின் தாரே;
அலரா கின்றாற் பெரும; காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்த னுறந்தை,
அரியரி லம்புக விளங்கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலந் தொழுதன கண்டே.

(உரை). காவிரியின் பலரும் நீராடுகின்ற பெருந்துறையின் பக்கத்திலுள்ள மருதமரத்திற் கட்டிய நிமிர்ந்த கொம்போடு கூடிய யானையையுடைய 'சேந்தன்' என்பவனது உறையூரையும், கூரிய பின்னிய அம்புகள் தைக்காமல் உகுந்துவிடின் உபயோகப்படும்படி ஒளிபொருந்திய வாள்களையும் கைக்கொண்ட, இளைய யானைகளை வேட்டையாடும் வரிசையாகக் கூடிய இளவீரர்களுக்குத் தலைவனான 'அழிசி' என்பவனது ஆர்க்காட்டையும் ஒத்த இவளுடைய குற்றமற்ற மாட்சிமைப்பட்ட அழகுநலங்கள் 'எம்மைச் சிதைக்காதே' என்று உன்னைத் தொழுது வேண்டின ; (அதைக்கண்டும் நீ பழைய வழியிலேயே ஒழுகாநின்றாய்.) அலர் எழுகின்றதாதலின், நீ இனிஎஞ்சேரிக்கண் வாராதே, பூமாலையையுங் கொணர்ந்து கொடாதே.

சேந்தன் - இவன் அழிசியின் மகன்; உறையூரிலிருந்து அரசாண்டவன். அரி - கூர்மை; வன்மையுமாம். அரில் - பின்னுதல். இளங்கோடு - (அன்மொழித் தொகை) முதிராத தந்தத்தையுடைய யானை. நிரைய-வரிசையான, 'அரியரில்...................இளையர்' என்ற இத்தொடருக்குப் பொருள் நன்குப் புலப்படவில்லை. அழிசி - இவன் சோழர் மரபினனான ஒரு சிற்றரசன்; இவனது தலைநகரம் 'ஆர்க்காடு'.உறையூரிலிருந்து அரசாண்ட 'சேந்தன்'இவன்மகன். இவ்விவரம்,

நிதலை யெஃகிற் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயறே. ரழிசி
* * * *
அரியலங் கழனி ஆர்க்கா டன்ன

என்ற நற்றிணைப் (190) பாட்டால் தெரிகின்றது. புறநானூற்றில் (71) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனுடைய கண்போன்ற நண்பருள் ஒருவனாகக் கூறப்பட்ட 'ஆதனழிசி' என்பவனும், 'அழிசி காட்டன் றெதிர்ந்தார்'என்று பெருந்தொகைப் பாட்டொன்றில் குறிக்கப்பட்டவனும் இவன்தானோ என்று தெளியக்கூடவில்லை.

---

கபிலர்] 259 [குறிஞ்சி

காப்புமிகுதிக்கண் தலைமகன் வரைந்துகொள்ளாமையைக் குறித்து ஆற்றாளாகி வருந்திய தலைமகள், 'நான் அறத்தொடுநின்று உனது துயரத்தைப் பரிகரிப்பல்; நீ வருந்தாதேகொள்' என்று தன்னைத் தேற்றிய தோழிக்குக் கூறியது.

மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தான நாறு நறுநுதற்
பல்விதழ் மழைக்கண் மாஅ யோயே,
ஒல்வை யாயினுங் கொல்வை யாயினும்
நீயளந் தறிவைநின் புரைமை;வாய் போலப்
பொய்ம்மொழி கூறலஃ தெவனோ?
நெஞ்ச நன்றே, நின்னுயிர் நானே.



(உரை.) மேகங்கள் தங்கி எழுந்து மழையைப் பொழியும் மலையருவிகளில் நிறைந்த குளிர்ந்த நன்மணமுள்ள காந்தளரும்புகள் மலர்ந்து நீங்காது தோன்றும் நல்ல நெற்றியையும், பலபூக்களையொக்கும் குளிர்ந்த கண்களையும், மாமை நிறத்தினையும் உடையவளே, நீ நட்பாய்ப் பொருந்தினும் பகையாய்க் கொல்லினும் நினக்கு மேன்மையைத் தருவது இன்னதென்பதை நீ சீர்தூக்கி அறிந்தனாய்; உண்மையைப் போலப் பொய்யைச் சொல்வது எதற்காக ? உனது உள்ளம் நல்லதே; நான் உனக்கு உயிர் போன்றவளே.

ஒல்வை - ஒல்லுதல், பொருந்தல். புரைமை - மேன்மை. வாய்வாய் - உண்மை.

---

கல்லாடனார்] 260 [பாலை

தலைமகனது நெடும் பிரிவிடை ஆற்றாது வருந்திய தலைமகள், அவனது வரவிற்கு நிமித்தமாவன கண்டு தோழிக்குச் சொல்லியது.

குருகும் இருவிசும் பிவரும்; புதலும்
வரிவண் டூத வாய்நெகிழ்ந் தனவே;
சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்;
வருவர்கொல், வாழி தோழி ? பொருவார்
மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர் வழையமலடுக்கத்துக்
கன்ற லோரா விலங்கிய
புன்று ளோமைய சுரனிறந் தோரே.

(உரை). நாரைகள் பெரிய வானத்தெழுந்து பறக்கலுற்றன; வரிவண்டுகள் தேனை உண்ணும்படி மலர்கள் இதழ் விரியத் தூறுகளும் மலரலுற்றன; சங்கவளையல்களாற் பொலிவுற்ற எனது தோள்களும் (இடம்) துடிக்கின்றன. (இவ்வாறு நன்னிமித்தங்கள் பலவும் உளவாகலின்), பகைவருடைய மண்ணை அள்ளியுண்ணும் சிறந்த யானைகளையும், வளப்பமுற்ற தேர்களையும் உடைய தொண்டைநாட்டரசருக்குரிய சுரபுன்னைமரங்கள் நெருங்கிய பக்கமலைகளோடு கூடியதும், புல்லிய தாளையுடைய வாகை மரங்களுள்ளதும், குறுக்கிட்டதுமான சுரத்தைக் கடந்து நான் படும் வருத்தத்தைக் கவனியாது சென்ற காதலர் சீக்கிரத்தில் திரும்பிவருவாரோ?

'வாய் நெகிழ்ந்தன' என்னும் பயனிலைக்கு 'மலர்கள்' என்று எழுவாய் வருவித்துரைக்க. சுரிவளை - சங்கு; இங்கு வளையல்களுக்கு ஆகுபெயர். செற்றும் - பின்னும், நெருங்கும்; இங்குத் 'துடிக்கும்' என்னும் பொருள் குறித்து வந்தது. பொருவார் - பொருந்ாதவர்; பகைவர். அமல் - நெருங்கிய. கன்றல் - கன்றுதல், மனம் நொந்து வேதல்; உள்ளம் புண்ணுதல். விலங்கிய - குறுக்கிட்ட.

குருகுகள் இடம் விட்டுப் பெயர்ந்து பறத்தலும், விரிந்த மலர்களிடத்து வண்டு வந்து தேனையுண்ணலும், தனது இடத்தோள் துடித்தலும், தலைவன் வரவைக் குறிக்கும் நன்னிமித்தமோவெனத் தலைவி தோழியைக் கேட்டாள் என்க.

---

கழார்க்கீரன் எயிற்றியார்]261 [குறிஞ்சி

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாக, தனது வருத்தத்தை அவனுக்கு உணர்த்துமாற்றான் தோழிக்கு உரைப்பாளாய்த் தலைமகள் சொல்லியது.

பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் சிற்பெயற் கடைநாள்
சேற்றுநிலை முனிஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத் தையெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானும்என்கண்
துஞ்சா, வாழி தோழி, காவலர்
கணக்காய் வகையின் வருந்திஎன்
நெஞ்சு புண்ணுற்ற விழுமத் தானே.

(உரை). இந்திரவில்லோடுகூடிய மேகங்கள் மழையைப் பெய்யுங் கார்காலத்தினிறுதியில் விடாது நெடுங்காலம் பெய்த மழையால் நன்னிலைகெட்டுச் சோடைபட்டழிந்த எள்ளின் காய்களையுடைய சேற்றுப் புலங்களில் அவற்றை மேய்ந்திருந்த செங்கண்ணையுடைய எருமைகள் அவற்றை வெறுத்து நடுராத்திரியில் 'ஒய்'யெனக்கத்தும் அஞ்சத்தக்க காலமாகிய நடுநிசியிலும், நோயுற்று எனதுநெஞ்சு புண்ணாகிய வருத்தத்தால் என்னுடைய கண்கள், அரசரின்கணக்குக்களை ஆராய்ந்து பார்ப்பவரைப் போலத் துஞ்சாவாயின, தோழீ.

பதன் - காலம், பக்குவம். உருகிய - உள்ளீடின்றி அழிந்த. எண் - எள். சேற்றுநிலை - சேற்றிடம்; சேற்றுப் புலம். காரான் - எருமை. ஐயென - அனுகரணவோசை. பொழுதினானும் - பொழுதினும்; இன், ஆன், இரண்டுஞ் சாரியைகள். 'பொழுதினானும்' என்பதும் பாடம். விழுமம் - துன்பம், நோய்.

---

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 262 [பாலை

தன்னை உடன்போக்குக்கு நேர்விக்கலுற்ற தோழிக்குத் தான் அதற்கொருப்பட்டதைத் தலைமகள் சொல்லியது.

ஊஉ ரலரெழச் சேரி கல்லெனா
ஆனா தலைக்கும் அறனி லன்னை
தானே யிருக்கத் தன்மகள் யானே
நெல்லி தின்ற முள்ளெயி றிலங்க
உணலாய்ந் திசினா லவரொடு சேய்நாட்டு
விண்டொட நிவந்த விலங்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே.

(உரை). ஊரிடத்து அலரெழவும், சேரியில் கல்லென்னும் ஒலியுண்டாகவும், ஓயாது என்னை வருத்தும் தாய் (என்னைப்பிரிந்து) தனித்துவருந்த, அவள் மகளாகிய நான் அவருடன் சென்று தூரமான நாட்டில் விண்ணைத் தொடும்படி உயர்ந்த குறுக்கிட்ட மலையகத்து, நெல்லிக் கனியைத் தின்று கூசிய கூரிய எனது பற்கள் விளங்க யானையினடி பதிந்ததாலுண்டாகிய பள்ளத்தில் தங்கிய நீரை உண்ணுதலைத் தேர்ந்து துணிந்தேன்.

கல்லெனல் - அலர் தூற்றலால். தானே - தமியளாய். நெல்லி - பாலைக்குரியது. உணல் - ஈற்றடியிலுள்ள 'நீர்' இதற்குச் செயப்படுபொருள். ஆய்ந்திசின் - ஆய்ந்தேன், ஆய்ந்து துணிந்தேன். 'மலைக் கவான்' - கவான், ஏழாம் வேற்றுமையுருபு, கவான் - துடை.

---

பெருஞ்சாத்தனார்] 263 [குறிஞ்சி

'நினது வேறுபாடு கண்டு அணங்குற்றுயென ஐயுற்றுத் தாய் முதலியோர் வெறியாட்டெடுக்கலுற்றார்; இனி யாம் செயற்பாலது என்னோ ?' என்று தலைமகளுக்குச் சொல்லுவாளாய்ச் சிறைப்புறத்தானான தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேய்க்கொ ளீஇய ளிவளெனப் படுதல்
நோதக் கன்றே, தோழி; மால்வரை
மழைவிளை யாடு நாடனைப்
பிழையே மாகிய நாந்தற் படவே

(உரை). ஆட்டுக்கிடாவின் கழுத்தையறுத்துத் தினைச் சோறுகிய பெருண்டியைப் பலியாக இட்டு, செல்லுங் கவர்த்த வழியில் பல வாத்தியங்களிசைக்க வெறியாட் டெடுத்து, வெற்றுத்தோற்றமாகிய பிசாசுகளையன்றி (உண்மையில்) நோய்க்கு மருந்தாகமாட்டாத வேறு பல பெருந்தெய்வங்களையும் வாழ்த்தி (பூசனை புரிந்துவணங்கி) 'இவள் பேய்க்கோட்பட்டாள்' என்று சொல்லப்படுதல், தோழீ, மிகவும் வருந்தத் தக்கதன்றோ? பெரிய மலையின் மீது மேகங்கள் தவழும் நாடனுக்கு யாதொரு தவறும் இழைக்காத நாம் இவ்விதத்துன்பத்தை அனுபவிக்கலாமோ?

குரல் - (ஆகு பெயர்) குரலுண்டாவதற்கிடமான மிடறு. பிரப்பு - பலவுண்டிகளைக் குறுணியளவாகப் படைத்துத் தெய்வங்களுக்கிடும் பெரும்பலி.

கொழு விடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇ —(232-34)

என்றார் திருமுருகாற்றுப் படையினும். தோற்றம்-வெற்றுத் தோற்றமாகிய பேய், பிசாசு முதலியவை; some ghostly apparition.

---

கபிலர்] 264 [குறிஞ்சி

*பிரிவிடைத் தான் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தான் ஆற்றுவல் என்பது படத் தலைமகள் சொல்லியது.*

கலிமழை கெழீஇய கான்யாற் றிகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயி லகவு நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பசந்த காலும் பசப்பொல் லாதே.

(உரை). இடிமுழக்கத்தோடு கூடிய மழை பொருந்திய கான்யாற்றின் இற்றுப்போன கரையில், தழைத்து நீண்ட தோகை அசையும்படி சென்று ஆடும்மயில் (தனது துணையைக்) கூவும் மலைநாடன் நம்மிடத்து நயந்து வேண்டிக் கொண்ட கேண்மை வேறுபாடுற்றபோதும் எனது முகத் திடத்துப் பசப்பாகிய வேறுபாடு உண்டாகாது.

இயலி - சென்று. நயந்தனன், முற்றெச்சம். பசப்பு - ஒருவித நிறவேறுபாடு; கேண்மை பசத்தலாவது - அது தனது தன்மையின் மாறுபடல்.

---

கருவூர்க் கந்தப்பிள்ளையார்] 265 [குறிஞ்சி

*தலைமகன் வரையாது பிரிந்தவிடத்து, 'அவர் பிரிந்தது நின்னை வரைந்துகொள்ளுதற்பொருட்டே' என்று தோழி தலைமகளுக்குக் கூறி ஆற்றுவித்தது.*

காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது
வண்டுவாய் திறக்கும் பொழுதிற், பண்டும்
தாமறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடனறி மாக்கள் போல, இடன்விட்
டிதழ்தலை யவிழ்ந்த ஏகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன், தோழி; நின்னிலை
யான்றனக் குரைத்தனெ னாகத்
தானா ணினனிஃ தாகா வாறே.

(உரை). காந்தளின் அழகிய கொழுமையான அரும்புகள், வண்டு கிட்டவந்து ஒலிக்கும்போது, முன்னரே தாம் அறிந்துள்ள செவ்விய குணத்தினராகிய மேலோர் (தம் மனைப்புறத்து) வரக்கண்ட, செய்யுங் கடன்களை நன்குணர்ந்த நல்லோரைப்போலத் தாம் மூடிக்கொண்டிருக்கும் காவலை நெகிழவிட்டு, அவ்வண்டுகளுக்கு இடங்கொடுத்துத் தமதிதழ்களை விரித்த மலர்களையுடைய பெரிய குன்றுகள் செறிந்த மலைநாடன் நல்ல நெஞ்சினன், தோழீ. நின்னிலையை எடுத்துக்கூறி, உன்னையும் உடன்கொண்டு போம்படி நான் சொன்னதற்கு அவன், அதன் பொருந்தாமையை நோக்கி அதற்கிசையாது நாணினன். (நாணி மேலொன்றும் பேசாது தனித்தே தான் அகன்றிட்டான்).

காவல் செல்லாது - காவல் செய்யாது. வாய் திறத்தல்- ஒலித்தல், சத்தித்தல். ஏகல் - பெரிய குன்று. 'ஏ' என்பது பெருமையை உணர்த்துமோர் உரிச்சொல்லாதலை. 'ஏ பெற்றாகும்' (தொல் - சொல் - உரி. 8) என்ற சூத்திரத்தாலும் அதனுரையாலும் உணர்க. 'நாணினன் ஆகாவாறே' என்றமையால் 'அவன் தனித்தே சென்று விட்டான்' என்பது குறிப்பெச்சம்.

சான்றோர் தம் வாயிற்புறத்து வரக்கண்ட கடனறிமாக்கள் கதவைத் திறந்து, இருக்கையீந்து, உண்டி யுதவி உபசரிப்பதைப்போலக் காந்தளரும்புகளும், வண்டுகள் வந்ததை உணர்ந்து முறுக்கவிழ்த்து, இதழ்விரித்துத் தங்க இடந்தந்து தேனையும் அளித்தன என்பதாம்.

---

நக்கீரர்] 266 [பாலை

*வரையாது பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவழி ஆற்றாத் தலைமகள் தோழிக்குரைத்தது.*

நமக்கொன் றுரையா ராயினுந் தமக்கொன்
றின்னா விரவின் இன்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கும் மறந்தனர் கொல்லோ,
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

(உரை). நம்மைக் கைவிட் டகற்றவல்லவராகிய காதலர், நமக்கு ஒருசெய்தியும் சொல்லியனுப்பா விட்டாலும், துன்பந்தருவதாகிய இரவிற் குறியிடமாய்த் தமக்கு இனிய உதவியைப் புரிந்த வீட்டுக் கொல்லைப்புறத்து வேங்கை மரத்துக்குக்கூடப் பறவையின் வாயிலாக ஒரு தூதனுப்புதலை மறந்தார் கொல்லோ?

ஒன்று இன்னா-இன்னா வொன்று, ஒன்றிய - தூது - (ஆகு பெயர்) தூதன் வாயிலாகச் செய்தி சொல்லியனுப்புதல்.

---

காலறிகடிகையார்] 267 [பாலை

*பொருளீட்டற்கண் பிரியும்படி தன்னை வலிக்கும் நெஞ்சிற்கு 'காளது சின்மையும், இளமைய தருமையும்' கூறித் தலைவகன் செலவழுங்கியது.*

இருங்கண் ஞாலத் தீண்டுபயப் பெருவளம்
ஒருங்குட னியைவ தாயினுங் கரும்பின்
காலறி கடிகைக் கண்ணயின் றன்ன
வாலெயி றூறிய வசையில் தீநீர்க்
கோலமை குறுந்தொடிக் குறுமக ளொழிய
வாள்வினை மருங்கிற் பிரியார், நாளும்
உறன்முறை மரபிற் கூற்றத்
தறனில் கோணற் கறிந்திசி னோரே.

(உரை). இந்த இடமகன்ற உலகத்தில் நிறைந்துள்ள பயனுள்ள பொருள்களின் பெருவளம் முழுவதும் ஒருங்கே கிடைப்பதாயினும் (எல்லாவற்றையும்) அறிந்தவர்கள் நிகழுமுறையில் நிகழற்பாலனவாகிய இரக்கமற்ற காலனால் நாள்தோறும் உளவாம் மாறுபாடுகளைக் குறித்து, கரும்பின் மிக்க இனிமை வாய்ந்ததாக உணரப்படும் அடித்துண்டின் கணுவைத்தின்றால் தோன்றும் சாற்றைப்போல வெள்ளிய எயிற்றினிடத்தில் ஊறும் குற்றமற்ற இனிய நீரையும், அழகமைந்த குறுகிய வளையல்களையும் உடைய சிறுமகளை விட்டுப் பிரிந்து, போர்வினையின்கட் போகக் கருதார். (ஆதலின் நானும் போதலைத் தவிர்த்தேன்.)

இருங்கண் - அகலிடம். கரும்பின்கால் - கரும்பின் அடிப்பக்கம். கடிகை - துண்டம். கண் - கணு. கரும்பின் நுனிப்பக்கத்தைக் காட்டிலும் அடிப்பக்கத்துச் சாறு இனிமை



மிக்கதென்பது யாவரும் அறிந்த 'விஷயம். கரும்பின் ........வாலெயிறூறிய தீநீர்'-இக்கருத்தே.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

என்ற திருக்குறளினும் ஒருவாறு அமைந்திருத்தல் காண்க.

'கூற்றத்து அறனில் கோணல்' என்பதை அறனில் கூற்றத்துக் கோணல்' என மாற்றுக. அறன் - (ஆகுபெயர்) அறவோர் குணமாகிய கண்ணோட்டம், இரக்கம். 'கூற்றத்துக் கோணல்' ஆவன, இளமை மாறி உறுப்புநலன் அழிதல், வாழ்நாள் குறைதல் முதலியன. கோணற்கு - கோணற் பொருட்டு, கோணலைக் குறித்து; பிரிந்து மீளுங் காலத்துக்குள் காமத்தைத் துய்ப்பதற்கேற்ற இளமை நீங்குதலையும், வாழ்நாள் குறைதலையும் நினைந்து. கோணற்கு - கோணலை, என்றுமாம்.

அறிந்திசினோர் கோணற்கு, இயைவதாயினும், குறுமகளொழிய, வினைமருங்கிற் பிரியார்' என்று வினை முடிக்க. 'அறிவுடையோர் பிரியார்' என்ற பொதுத் தன்மையால் தான் செலவழுங்கியதைத் தலைமகன் குறிப்பால் உணர்த்தியதாம்.

---

கருவூர்ச் சேரமான் சாத்தனார்] 268 [குறிஞ்சி

*சிறைப்புறத்தானாகிய தலைமகனுக்குத் தனதாற்றாமை புலப்படுமாறு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.*

சேறி ரோவெனச் செப்பலும் ஆற்றாம்;
மருவி ரோவென வினவலும் வினவாம்;
யாங்குச்செய் வாங்கொல், தோழி, பாம்பின்
பையுடை யிருந்தலை துமிக்கு மேற்றொடு
நடுநா ளென்னார் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே.

(உரை). தோழீ, பாம்பின் படத்தையுடைய பெரிய தலையைத் துணிக்கும் இடியோடுகூடிய (மழைக்காலத்து) நடுநிசியென்று கருதாராய் வந்து எனது நீண்ட மெல்லிய மூங்கிலையொத்த தோளைத் தழுவிக் கூடியவரை, 'நீர், செல்வீரோ' என்று சொல்லவும் மாட்டோம், 'மீண்டும் வருவீரோ' என்று கேட்கவும் மாட்டோம்; இனி யாம் என்ன செய்வாம்?

சேறிர்-செல்திர். மருவீரோ-(மீண்டும் வந்து) கூடுவீரோ. 'வருவீரோ' என்ற பாடமே நேராம். ஏறு - இடி. 'பாம்பின்.........ஏறு' - இடியைக் கேட்டுப் பாம்பு இறக்குமென்பதும், இடி பாம்பின் படம்விரித்த தலையைத் துணிக்கும் என்பதும் தமிழ்நூல்களிற் கண்ட செய்தி.

---

கல்லாடனார்] 269 [நெய்தல்

*இதுவும் அது.*

சேயாறு சென்று துணையரிய சாவா
துசாவுநர்ப் பெறினே நன்றுமன் றில்ல;
வயச்சுறா வெறிந்த புண்டணிந் தெந்தையும்
நீனிறப் பெருங்கடல் புக்கனன்; யாயும்
உப்பை மாறி வெண்ணெற் றரீஇய
உப்புவிலை கழனி சென்றனள்; அதனால்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்
கினிவரி னெளிய ளென்னுந் தூதே.

(உரை). 'வலிய சுறாமீன் கடித்தபுண் ஆறி எனதுதந்தையும் கரிய பெரிய கடலில் (மீன் பிடிப்பதற்கு) சென்றுவிட்டான்; உப்பைக் கொடுத்து அதற்கு மாறாக வெள்ளை நெல்லை வாங்குவதற்காக, எனது தாயும் உப்பளத்துக்குப் போய்விட்டாள்; ஆகையால் இப்பொழுது வந்தால் என்னை எளிதிற் காணலாம்' என்று, குளிர்ந்த பெரிய நெய்தனிலத் தலைமகனிடத்துத் தூதாக நெடிய வழியிற்சென்று, காதலனைப் பிரிந்ததால் யான் பிரிவாற்றாது வருந்தி இறந்துபடாவண்ணம், (அவரது மனநிலையை) விசாரித்து அறிந்து வருவாரைப் பெற்றேனாயின் மிகவும் நன்றாகும்.

சேயாறு - சேய்மையான வழி. துணைஅரிய - துணைவன் அரியனாக, அரியனாய் விட்டமையால். தில்ல - அசை.

---

பாண்டியன் பன்னாடுதந்தான்] 270 [முல்லை

*வினைமுற்றி மீண்டு தலைவியுடன் பள்ளியிடத்திருந்த தலைமகன் கூறியது.*

தாழிரு டுமிய மின்னித், தண்ணென
வீழுறை யினிய சிதறி, ஊழியிற்
கடிப்பிடு முரசின் முழங்கி, யிடித்திடித்துப்
பெய்தினி, வாழியோ பெருவான்; யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தா ணண்மலர் நாறும்
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே.

(உரை). யாம், செய்யக்கருதிய வினையைச் செய்துமுடித்தபெருமைவாய்ந்த உள்ளத்தோடு இவளுடன்கூடினேமாய்க் குறுகிய தாளையுடைய புதிய குவளைமலர்களைச் சூடி மணங்கமழுங் கூந்தலாகிய மெல்லிய அணையினிடத்தேம் ஆயினேம். பெரிய மேகமே, இனி நீ அடர்ந்த இருள் கெடும்படி மின்னி, குளிர்ந்துவிழும் இனிய மழைத்துளிகளைச் சிதறுவித்து, அடிக்கப்படும் முரசைப்போல இடித்து முறையாக மழையைப் பெய்து என்றும் வாழ்வாயாக.

தாழிருள் - ஆழமான இருள்; deep darkness. கடிப்பு- முரசையடிக்குங் குறுந்தடி. வான்-(அண்மைவிளி) வானமே. செம்மல் - தலைமை, பெருமை, பெருமிதம்; மேவினம் - 'மேவலம்' என்றும் பாடம்.

பிரிந்த காலத்துத் துன்பஞ்செய்யும் இயல்பினதாகிய கார்காலமழை கூடியிருக்குங் காலத்து இன்பந்தருந் தன்மையைக் கருதிப் 'பெய்தினி வாழியோ, பெருவான்' என்றான் என்க.

189126

---

அழிசி நச்சாத்தனார்] 271 [மருதம்

*பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனுக்கு வாயினேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.*

அருவி யன்ன பருவுறை சிதறி
ஆறு நிறை பகரு நாடனைத் தெரியுற்
றஃது மன்னும் ஒருநாள்; மற்றது
தவப்பன் னாடோள் மயக்கி
வெளவும் பண்பின் நோயா கின்றே.

(உரை). அருவியைப் போலப் பெருந்துளிகளை வீசி ஆறு தனது நீர் மிகுதியை ஆரவாரித்தறிவிக்கும் மருதநிலத்தூரனைத் தவறிலனாகத் தெளிந்து மறுதேற்றுக்கொள்ளுமாறு நீ என்னை வேண்டுவது, அவனது பரத்தைமை ஒருநாளை ஒழுக்காயிற் பொருந்தும்; அவ்வாறன்றி இவ்வாறே அவன் என்னைமருட்டித் தோளைத்தழுவி எனது நலத்தைக் கவர்ந்துண்ணுந் தன்மையனாய் மிகப்பலநாளும் ஒழுகுகின்றமையின் எனக்கு மிகவும் வருத்தத்தை விளைக்கின்றது.

தெரியுற்றஃது - (விகாரம்) தெரியுற்றது: நீ தெளியுற்று என்னைத் தெளிவுறுத்துவது. 'ஒருநாள் ஆயின்' - ஆயின் என்பதற்கு 'அவனது பரத்தைமை' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. அது - அப்பரத்தைமை. மயக்கி- (அழகைக்) கெடுத்து, சிதைத்து என்றுமாம்.

---

ஒருசிறைப் பெரியனார்] 272 [குறிஞ்சி

*தன்னைக் கழறிய பாங்கனுக்குத் தலைமகன் உரைத்தது.*

தீண்டலும் இசைவது கொல்லோ, மாண்ட
வில்லுடை யிளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசை கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகண் டன்ன வுண்கண்
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.

(உரை). சிறந்த வில்லையேந்திய வேட்டுவவிளைஞர் கல்லையெறிந்துஓட்டியதால் அகன்ற கானகத்தில் இனத்தினின்று பிரிந்த கலைமானின் மார்பில், அதன் துன்புற்ற பிணைமானின் நலங்கெடத், தனது தமையன்மார் அழுத்திக் குருதியோடு பிடுங்கியெடுத்த வில்லினின்று விடுபட்ட மிக்க கடிய விசையோடுகூடிய செம்மையான அம்பையொன்ற மையுண்ட கண்ணையும், நறுமணங் கமழுங் கரிய கூந்தலையுமுடைய குறமகளின் தோள்களைத் தழுவுதல் எனக்குக் கிடைக்குமோ?

மான் ஏர் பட - மானின் அழகு கெட. தன்னையர் - கொடிச்சியின் ஐயன்மார் (தமையன்மார்). 'கடுவிசைச் செங்கோல்வாளி'. கோல்வாளி - கோலாகிய வாளி; இரண்டவாளி என்னுமாம். மாறுகண்ட-பகைத்துவென்ற. 'குருதியோடு பறித்த வாளியன்னகண்' என்றது, முன் இயற்கைக் கூட்டத்தினும் இடந்தலைப்பாட்டினும் தன்னைக் கூடிய ஞான்று கலவியாற் சிவந்த அவளுடைய கண்களை.

'கழறிய பாங்கற்குக் கூறுந்தலைவன் இவளால் இக்குறை முடியாது; செருநல் இடந்தலைப்பாட்டிற் கூடியாங்கு கூடுவல்; அது கூடுங்கொலென்று கூறுவான் அற்றை ஞான்று மெய் தொட்டுப் பயின்றதே கூறினன்' என்பர் நச்சினார்க்கினியர்: (தொல் - பொருளதி - களவியல், 11 உரை.)

'வில்லுடை வீளையர்', 'கல்விடுபெடுத்த', 'மானேர்படசைஇ' என்பன பாடாந்தரம்.

சிறைக்குடி ஆந்தையார்] 273 [பாலை

*தலைமகனது வரைவிடைப்பிரிவைக் குறித்துக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தி ஆற்றுவித்தது.*

அல்குறு பொழுதிற் புறுதுமுகை தயங்கப்
பெருங்கா டுள்ளும் அசைவளி போல,
தண்ணிய கமழு மொண்ணுத லோயே,
நொந்தனை யாயிற் கண்டது மொழிவல்;
பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல
ஏமார் தன்றிவ் வுலகம்;
நாமுளே மாகப் பிரியலெம்; தெளிமோ.

(உரை). குளிர்ந்ததும், நன்மணங் கமழ்வதுமாகிய ஒளிபொருந்திய நெற்றியை உடையவளே, அந்திப்பொழுதில் (காதலனுடன் கூடியிருந்து) இன்புறப்பெறாது, பல குகைகள் தயங்கவும் அவற்றுட்புகாது பெருங்காட்டையே நோக்கிச் சென்று அடித்து அலையுங் காற்றைப்போல, நீ வருந்தினையாயின் நான் அறிந்தோர் உண்மையைச் சொல்லுவேன், கேள். பெரிய தேனிறாலொன்று கண்ணெதிர்த் தோன்றும் மலையின்மீது வலியதோர் ஏணியின்றி ஏற முயன்ற அறிவிலியைப் போல (வீணாக) ஆசைப்படுவதன்று இவ்வுலகம். நாம் உயிரோடிருப்போமாயின் அவனை ஒருகாலும் பிரியோம். நீ இதனைத் தேர்வாயாக.

அல்குறுபொழுது - (சூரியனொளி, அல்லது பகல்) சுருங்கும் மாலைநேரம். இற்புறு - (விகாரம்) இன்புறு; இங்கு இவ்விகாரத்துக்கு யாதொரு காரணமும் இன்மையின் பாடம் சிதைந்திருக்குமோ என்ற சந்தேகத்துக்கு இடமுண்டு. முகை - குகை. முதுமை - இங்கு வன்மை. மால்பு - ஏணி: 'மால்புடை நெடுவரை' (135) என்று புறப்பாட்டினும், 'நறவினை வோர்ந்தெமர் மால்பியற்றும் (133) என்று திருக்கோவையாரினும் வந்திருத்தல் காண்க. மடவோன் - அறியாதவன். ஏமாந்தன்று - (விகாரம்) ஏமாந்தது அன்று: ஏமாத்தல் - ஆசைப்படுதல். உலகம் - உயர்ந்தோர், அறிந்தோர்.

'வரையினுச்சியிலுள்ள தேனைப்பெற விரும்புவோர் ஏணியைத் துணையாகக் கொண்டே ஏறல் வேண்டுவதுபோல, உனது நலத்தை நுகரவிரும்புந் தலைமகனும், (களவொழுக்காலன்றி) நன்மணம்புரிந்தே உன்னை அடைதல் வேண்டும். அதற்குப் பொருளின் துணை இன்றியமையாதது. அதன் பொருட்டே அவன் இப்பொழுது பிரிந்தனான். பொருளை ஈட்டிக்கொண்டு விரைவின் வந்து வரைந்துகொள்வான். நீ வருந்தாதே' என்று தலைமகளைத் தோழி தேற்றியவாறும்.

உருத்திரனார்] 274 [பாலை

*பொருளை ஈட்டற்கண் தன்னை வலித்த நெஞ்சிற்குத் தலைவன் உரைத்தது.*

புறவுப்புறத் தன்ன புன்கா லுகாஅத்
துச்சினை யன்ன நனிகனி யுதிர
விடுகணை வில்லொடு பற்றிக் கொடியவர்
வருநர்ப் பார்க்கும் வன்கண் ணுடைவர்
நீர்நசை வேட்கையின் ஆர்மென்ப தணியும்
இன்னாக் கானமும் இனிய, பொன்னொடு
மணிமிடை யல்குன் மடந்தை
அணிமுலை யாகம் மூழ்கினஞ் செலினே.

(உரை). 'வில்லிலே எய்யு மம்புகளைத் தொடுத்தேந்தி வழிச்செல்வார் வருகையைப் பார்த்திருக்கும் கொடியவரும் அஞ்சாதவருமாகிய மறவர் தாகமுற்றபோது அதைத் தீர்த்துக்கொள்வதற்குப் புறவின் மேற்புறத்தைப் போன்றதும் புன்மையான காலை உடையதுமான உகாமரத்தின் பறவையின் முட்டையையொத்த செறிந்த கனிகள் உதிர்ந்தவற்றை உண்பதும், (கொலையுண்டு வீழ்ந்தார்) என்பை அணிந்தனவுமான துன்பத்தைத் தருங்கானமும், பொற்காசுடன் மணிகள்மிடைந்த மேகலையை அணிந்த அல்குலையுடைய காதலியின் அழகிய முலையோடு கூடிய மார்பில் இளைத்துப் பின்பு பிரிந்து செல்வோமாயின், இனியனவாய் விடும்.

உகா - ஒரு மரம். சினை-முட்டை. வன்கண்-அஞ்சாமை. நீர் நசை வேட்கை - தாகம். ஆர்ம் - ஆரும்.

செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை யுகரம்
(சொல் - வினை 41)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் 'ஆரும்' என்பது 'ஆர்ம்' என்றாயிற்று. என்பதணியும்-என்பு அது அணியும். ஆரும், அணியும், இன்னாக் கானம் என்றியைக்க. இனிய - இனியவாம். மிடை - மிடைதல், நெருங்குதல் (முதனிலைத் தொழிற் பெயர்);'பொன்னொடு மணி மிடை' என்பது அன்மொழித் தொகையாய் மணிமேகலையைக் குறித்து நின்றது. 'ஆகமுழக்கினம்' என்பது மொரு பாடம்.

ஒக்கூர் மாசாத்தியார்] 275 [முல்லை

*பருவ வரவின்கண் தலைமகனது வரவுநிமித்தம் தோன்றக்கேட்ட தலைவி தோழிக்குக் கூறியது.*

முல்லை யூர்ந்த கல்லுயர் பேறிக்
கண்டனம் வருகம், சென்மோ, தோழி;
எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை யினத்துப்
புல்லார் நல்லான் பூமணி கொல்லோ,
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
வல்வி லிளையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாறு வரூஉந்
தேர்மணி கொல்லாண் டியம்பிய உளவே.

(உரை). தூரமாகிய அவ்விடத்தே மணியின் ஓசை உண்டாகின்றன. அவை அந்நேரத்தில் புல்லைமேய்ந்து ஊருக்குத் திரும்பும் ஏற்றுடன் கூடிய ஆனினத்து நல்ல பசுமாடுகளின் கழுத்திற் கட்டிய பொலிவுற்ற மணியினொலியோ, அல்லது செய்யலுற்ற காரியத்தைச் செய்து முடித்த மகிழ்ச்சியாற் சிறந்த உள்ளத்தோடு வலிய வில்வீரராகிய இளைஞர் தன்னைப் பாதுகாத்துப் பக்கத்திலேவர ஈரமான மணலையுடைய காட்டின் வழியே வரும் தலைவருடைய தேரிற் கட்டிய மணியினோசையோ, தெரியவில்லை. முல்லைக்கொடி மேலேறிப் படர்ந்த குன்றினுச்சியிலேறிப் பார்த்து வருவாம்; போவாம் வா, தோழி.

உயர்பு - உயர்ச்சி, உயரம்; இங்கு ஆகு பெயராய் உச்சியைக் குறித்தது. எல் - சூரியனொளி: இங்கு அது முற்றும் நீங்காத மாலைக்காலம். ஏறு - காளை, எருது. 'நல்லான்' என்றது தன்னைப் போலாது புல்லைமேயச் சென்ற காலையிலும், மேய்ந்து திரும்பிய மாலையிலும் ஏற்றைப் பிரியாதிருந்தமையால். கொல்லாண்டு - கொல்லோ, ஆண்டு, என ஓகாரம் வருவிக்க. 'ஆண்டு' என்பது தூரத்திலேயுள்ள அவ்வொலியெழுந்த இடத்தைச் சுட்டி நின்றது.

தலைமகள், தான் ஒலிக்கக் கேட்டது தனக்குத் துன்பத்தைத் தரும் 'பூமணியோ', இன்பத்தைத் தருந் 'தேர் மணியோ'என்று ஐயுற்று மலை மீதேறிப் பார்த்துத்தெளியும் பொருட்டுத் தோழியை அழைத்தாள் என்க.

இதைத் தோழியின் கூற்றாகக் கொள்வாருமுளர்.

## பிரஜைகளின் கடமை

## (From Plato's dialogues)

[813 - வது பக்கத் தொடர்ச்சி]

சாக்ரிடிஸ்:—சட்டங்கள் சொல்லியவை உண்மையாயின் ஐய—அவை பின்னும்சொல்லும்:—"சாக்ரிடீஸே, யோசித்துப்பார்; நாங்கள் சொல்லியவை ஏற்பதற்குரியவையாயின் இப்பொழுது நீ செய்யவிருக்கும் முயற்சியால் எம்பால் தவறே இழைக்கின்றாய். உன்னை இவ்வுலகத்தில் உதிக்கவைத்து, வளர்த்துக் கற்கச்செய்து, கிரேக்கர்க்குள்ள உரிமையெலாம் தந்து அரசாங்கத்தால் ஏற்படுகின்ற நன்மையில் உனதானபாகமெல்லாம் நீ பெறுமாறு செய்தோம். பிறகு உனக்குப் போதிய அறிவுவந்து நாட்டின்முறை எங்களது செல்லுறுகதி இவைகளையெல்லாம் நன்கு தெரிந்துகொண்டதன்மேல் எங்களது வழியும் முறையும் ஏற்கலாகா வகை யாருக்கிருக்கின்றதோ அவர்கள் இந்நாட்டை விடுத்து அவர்களுக்கு இஷ்டமானவிடத்திற்குச்செல்லலாம் என்று சொன்னோம். எவனும் தனது சொத்து சுதந்தரத்துடன் தான் விரும்புகின்ற இடத்திற்குச் செல்வதை நாங்கள் தடுக்கவில்லை. நாட்டின் முறையையும், சட்டதிட்டங்களின் நியாய அநியாயங்களையும் நன்கு தெரிந்து பின்னும் வெளியேறாது ஏதன்ஸ்நகரிலேயே ஒருவன் இருப்பானானால், எங்களது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு அந்த ஒருவன் சம்மதித்தவனாகின்றான். எனின், இதன்மேல் ஒருவன் எங்களது வார்த்தையை மதியாது நடப்பானாயின் அவன் இழைக்கும் பிழை மூவ்வகையாகும். முதலாவதாக, எங்களுக்குக் கீழ்ப்படிந்துநடவாதலால் தன் பெற்றோர்க்கே கீழ்ப்படியாதவனாகின்றான். இரண்டாவதாக, அவனுக்குக் கல்விதந்துதவிய ஆசிரியராம் எங்களுக்குக் கீழ்ப்படிதலை மறுத்தவனாகின்றான். மூன்றாவதாக, எங்களுக்குக் கீழ்ப்படிந்துநடப்பதாகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தினின்று தவறினவனாகின்றான். (அதாவது வயதுவந்ததும், ஏதன்ஸில் இருக்க இஷ்டமில்லாதுபோனால் வேறுநாடுகள் செல்ல அந்நகரவாசிகள் உரிமை பெற்றிருக்கின்றனர். அப்படியிருக்க வெளிநாடுகள் செல்லாது அங்கேயே ஒருவன் இருப்பானேயானால் ஏதன்ஸ்நகரச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி ஒழுகுவதாக ஒப்புக்கொண்டவனாகின்றான், என்பது கருத்து.]

"எனவே எங்களுக்குக் கீழ்ப்படிந்தே தீரவேண்டும். அப்படிக் கீழ்ப்படியாவிட்டால், எங்கள் தவறு ஏது என்றாவது காட்டவேண்டும். இரண்டிலொன்று செய்வதற்கு நாங்கள் அனுமதி தருகின்றோம். என்ன சொல்கின்றாய். நீ உனது இஷ்டப்படி தப்பித்துக் கொள்ள முயல்வாயானால், மேற்கூறிய பழிக்கு மற்றவர்களைக்காட்டிலும் மிகுதியாக நீ ஆளாகவேண்டும்."

'ஏன் மற்றவர்களைக் காட்டிலும் நான் மிகுதியாக ஆளாகவேண்டும்' என்று நான் அவைகளைக் கேட்கின்றேன் என்று வைத்துக்கொள்—'மற்றவர்களைக் காட்டிலும் உறுதியாய் நீ எங்களை ஏற்றுக்கொண்டுள்ளாய்' என்று உடனே அவை எதிர் உரைக்குமே. 'இதுவரை இந்நகரமும் நாங்களும் உன்மனதிற்குகந்தவர்களாகவே இருந்திருக்கின்றோம் என்பதற்குப் போதிய சான்றுமுளது',என்று அச்சட்டங்கள் பின்னுஞ் சொல்லும்:—

"ஏதன்ஸ் நகரத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகநாள் நீ வசித்திருக்கின்றாய். ஆகையினால் இதை நீ அதிகம் விரும்புவதாகவே நாங்கள் நினைக்க வேண்டியிருக்கின்றது. 'இஸ்துமஸ்' என்னும் ஊருக்குப்போக நேர்ந்தகாலத்தில் ஒருமுறைதான் ஏதன்ஸைவிட்டு வெளியில் போயிருக்கின்றாய். வேடிக்கையென்றும், பந்தைய விளையாட்டென்றும் நீ எங்கும் போவது கிடையாது. மற்றவர்களைப்போல் வேற்றூர் பார்த்தல் பிரயாணம்செய்தல் முதலிய விருப்பங்கள் இல்லாதவன் நீ. ராணுவ அவசியத்தால் படையுடன் செல்வதல்லாமல் வேறு காலங்களில் இடம்விட்டுப்பெயரும் இயற்கையில்லாதவன். மற்ற நாடுகளையும் சட்டதிட்டங்களையும் ஆட்சிமுறைகளையும் பார்த்துஆராய்ச்சிசெய்யவேண்டுமெனும் எண்ணமு முனக்கில்லை. இந்நாட்டைவிட்டு உனது அபிமானம் எங்கும் சென்றது கிடையாது. எனவே நாங்கள் உனது அபிமானத்தைப்பெற்றவர். எங்களை நீ இவ்வி ஏற்றுக்கொண்டாய்

கின்றாய். எங்கள் ஆட்சிமுறை வகையனைத்தும் உன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இப்படி எங்களை ஏற்று, வேறிடம்போகாமல் இங்கேயே இருந்து வாழ்ந்து மக்களைப்பெற்றாய். ஆதலினால், எங்கள்மீது உனக்குக் குறைவற நிறைந்த நம்பிக்கையுளதென்று கொள்கின்றோம். விசாரணை நடந்தகாலத்தில் நீ விரும்பியிருந்தால் மரணதண்டனைக்குப் பதிலாக இந்நகரத்தைத் துறந்தகலுந் தண்டனையைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். இந்நாட்டைவிட்டு நீவெளியேறுவதற்கு இப்பொழுது இசையாத சட்டங்கள் அப்பொழுது வெளியே நீ சென்றுவிடுவதை அனுமதித்திருக்கும். தேசப்பிரஷ்டத்தினும் சாவையே நீ ஏற்க விரும்புவதாகவும், சாவிற்கு அஞ்சவில்லை யென்றும் அப்பொழுது பாசாங்கு செய்தனையோ; அல்லது அப்பொழுது நீ கூசாதுசொல்லிய வார்த்தைகளை இப்பொழுது மறந்தனையோ. எங்களுக்குக் கீழ்ப்படிய இப்பொழுது பின்வாங்குகின்றாய். அப்படிச்செய்வதால் எங்கள் சக்தியை அழித்தவனாகின்றாய். ஏதன்ஸ் நகரவாசி என்கின்றபான்மையில் செய்த ஒப்பந்தத்திற்கு முதுகுகாட்டி அஞ்சிப்போ யகலுமொரு அடிமைபோல் ஓடுவதற்கு முயல்கின்றாய். முதன்முதலாக இந்தவொரு கேள்விக்குப் பதில்சொல்வாய். எங்களுடைய ஆட்சிக்கு அடங்குவதாக நீ சொல்லியது வெறும் வார்த்தையோ, அல்லது உண்மையாய் ஒழுக நினைத்த ஒப்பந்தந்தானோ—சொல்.

நண்பனே, கிரிட்டோ, இத்தக் கேள்விக்கு நாம் என்ன பதிலைச்சொல்வது. அவைகளின் கூற்றை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்?

கிரிட்டோ:— சாக்ரிடீஸே, ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றே நினைக்கின்றேன்.

சாக்:—ஏற்பதற்குரியவையாயின், நண்பா, இனி அவை இவ்வாறு கூறுவோ:—நீண்டநாள் நன்கு கவனித்துப் பின் எங்களோடு செய்துகொண்ட கட்டுப்பாட்டையும் ஒப்பந்தத்தையும் நீ தகர்க்கலாகாது. அவ்வொப்பந்தத்தை நீ யொன்றும் அவசரத்தில் செய்துவிடவில்லை, நிர்ப்பந்தத்தாலும் செய்துவிடவில்லை. நாங்கள்வஞ்சித்தும் உன்னை ஏற்றுக்கொள்ளுமாறு செய்துவிடவில்லை. எழுபதுவருடம் இங்கு வாழ்ந்துள்ளாய். இந்த எழுபதுவருட காலத்தில் எந்தச் சமயத்திலும் இந்நகரைவிட்டுவிட்டு நீ வெளியேறி வேறு நாடடைவதற்கு உனக்குச் சகலசுதந்திரமும் எங்களால் அளிக்கப் பெற்றிருந்தது. எங்கள் முறை உன்மனதிற்கு உகந்ததாயிராமல்நம்முடைய ஒப்பந்தம் நியாயமற்றது என்று உனக்குத் தோன்றியிருந்தால் நீ இந்நகரைவிட்டு அகன்றிருக்கலாம். சிறந்த அரசியல் முறையை உடையதென்று நீ அடிக்கடி புகழும், கிரீட் நகரத்திற்கோ, அல்லது லாஸிடோனியாவிற்கோ, அல்லது வேறு எந்த நகரத்திற்கோ சென்றுவிட்டிருக்கலாமே. மற்ற எந்த நகரத்தினும் ஏதன்ஸை நீ அதிகமாய் விரும்பினவனாய்க் காணப்படுகின்றாய். இந் நாட்டையும், ஆட்சிமுறையையும், சட்டதிட்டங்களையும் விரும்பவில்லை என்று நீ சொல்வதற்கில்லை. ஏனெனில் நீ இந்நகரைவிட்டு வெளியே செல்வதே இடையாது. கண்ணிலாக் குருடரும், கால் கை முடவரும்கூட உன்னைப்போல் இடம்விட்டுப்பெயராது இங்கே இருந்ததில்லை. ஆகையால் நீ இந்நாட்டையும், ஆட்சிமுறையையும் விரும்பியேயுள்ளாய். அப்படியிருக்க இப்பொழுது, ஒப்பந்தத்தைக் காற்றிலே தூற்றிவிட்டு வெளியேறிவிட இருக்கின்றாயே. சாக்கிரிடீஸே, அப்படிச் செய்யக்கூடாது. எங்கள் புத்திமதியைக் கேட்பாய். நீ தப்பி ஓடுவதால் உன்னையே தாழ்த்திக் கொள்கின்றாய்”

“இன்னும் யோசித்துப்பார். நீ இப்படி ஒப்பந்தம் கடந்து காரியங்கள் செய்வாயானால் உனக்கும் உன் நண்பர் பலருக்கும் என்ன நன்மையைச் செய்தவனாவாய். நீ தப்பி ஓடிவிட்டால், உனது நண்பர்கள் தம் பொருள்களை இழக்கவும், நாட்டைவிட் டகலவும், பிரஜா உரிமையை இழக்கவும் நிச்சயமாய் நேரிடும். நண்பர்கதி யிதுவாக உன் நிலையைபற்றித்தான் பார்ப்போம். நீ சிறையினின்று தப்பி, ஏதன்ஸிற்கு அருகாமையிலுள்ள ‘தீபஸ்’, அல்லது ‘மெக்காரா’ என்னும் நகரங்கள் ஒன்றினில் போய்ச்சேர்கின்றாய் என்று வைத்துக் கொள்வோம். அவையிரண்டும் செவ்விய ஆட்சிமுறையைக்கொண்ட நாடுகளாகும். ஆகவே அவை, சட்டம் மீறிய செயலுடைய உன்னைச் சிநேகமாய் ஏற்குமா? உன்னை அவை பகைவனேபோல் வரவேற்குமே யல்லாது வேறன்று. தேசபக்தியுள்ள ஜனங்களும், சட்டத்துரோஹி என்றே உன்னை நோக்குவர். அந்நகர நியாயாதிபதிகளும், நீ தண்டிக்கப்படத் தகுந்தவன் என்றே எண்ணுவார். ஏனென்றால், சட்டத்தை மீறி நடந்து, ஒரு கட்டுப்பாட்டைக் குலைக்கும் உன்போன்ற ஒருவன், ஜனங்களில் புத்திசாலிகளல்லாத சில பகுதியினரையும் கெடுத்துக் குலைத்துவிடலாமன்றோ? நீ இப்படி நல்ல ஆட்சிமுறையினின்றும் நல்ல மனிதர்களினின்றும் ஓடிக்கொண்டே யிருக்கப்போகிறாயா? இப்படி ஓடி ஓடி வாழ்வதும் ஒரு வாழ்க்கை யாகுமா, சொல். அல்லது வெட்கமில்லாது நல்லமனிதர்களின் முகம் நோக்கி இனிப்பேசவும்வல்லையோ? அவர்களிடம்போய் என்ன சொல்வாய்? மனிதருக்குள் தர்மநியாயமும் ஆட்சிமுறையும் மிகச்சிறந்ததாய் இருக்கவேண்டுமென்று நீ எல்லோரிடத்தும் உபதேசங்கள் பல செய்யப்போகிறாயா? அப்படிச் செய்வாயானால் அதுபொருந்தும் செயல் ஆகுமா? சாக்ரிடீஸே அது நேரிய முறையன்று. நீ நல்ல ஆட்சிமுறையையுடைய இங்கிருந்து ஓடி, உனது நண்பன் சொல்கின்றபடி தெஸலியிலுள்ள அவனது நண்பர்களிடம் செல்கின்றாய். ஒழுக்கக்குறைவும் குழப்பமும் களியாட்டங்களும்பெருகிய தெஸலியிலுள்ளவர் சட்ட விரோதமாய்ச் சிறையினின்று தப்பிய உன் சாகசத்தைக்கேட்டு மனம்மிக மகிழலாம். நன்று, ஆனால் சிறிதுநாள் இப்பூமியில் இன்னும் வாழவேண்டுமென்னும் ஆசையினால் இந்தக் கிழவயதில் சட்டத்தைக்கடந்து இழிந்துவிட்டாய் என்று உனக்கு ஞாபகப்படுத்துபவர் ஒருவரும் இல்லாது போவரோ? அவர்கள் மனம் கோணாதவாறு நீ நடந்துவரும்வரையில் ஒருகால் அவர்கள் சும்மா இருக்கலாம். ஒருநாள் அல்லாக்கால் ஒருநாள், அவர்களுக்குக் கோபம் வருமானால் உன்னை அவர்கள் தூற்றுவதையுங் கேட்டே தீர்வாய். நீ இங்கிருந்து தப்பி யோடினால், உயிருடன் இருக்குங் காலம் இன்னுஞ் சிறிது வாய்க்கலாம். ஆனால் நீ வாழ்வது எப்படி? இச்சகம் பாடிப்பாடி வாழலாம்; இட்டவேலையை அடிமையைப்போல் செய்து செய்து வாழலாம். அப்படி வாழுங்கால் இன்பதுங் குடிப்பதுமன்றிவேறு என்னசெய்ய இயலும். நீவெளி



யேறியது வயிற்றை நிறப்புவதற்கேயன்றோ! எனின் நியாயத்தைப்பற்றியும் தர்மத்தைப்பற்றியும் நீ சொல்லியவெல்லாம் என்னாவது? இதுபோகட்டும், உனது குழந்தைகளின்பொருட்டு வாழவிரும்புகிறேன்என்று சொல்கின்றாயோ? அவர்களை வளர்த்துக் கல்விப் பயிற்சி யளிப்பதற்காக உயிருடன் இருக்க நீ முயல்வது உன் கடனென்னுங் கருத்தோ! நன்று, இதற்காக அவர்களைத் தெஸலிக்கு அழைத்துச் சென்று அதீனியப் பிரஜா உரிமையை அவர்கள் இழக்குமாறு செய்யப் போகின்றனையோ? இதுதானா நீஉன்மக்கள்பால் செய்யவிருக்கும் நன்மை. அவர்களுடன்கூட வசிக்காவிட்டாலும், நீ உயிரோடு இருந்தால்தான் ஏதன்ஸ் அரசாங்கம் உன் குழந்தைகளின் விஷயத்தை நன்கு கவனித்து வளர்த்துக் கல்வி போதிக்கும் என்று கருதுகின்றனையோ? உனது நண்பர்கள் அவர்களைக் கவனித்துக் கொள்ளமாட்டார்களா? தெஸலியில் நீ இருந்தால்தான் அந்நண்பர்கள் உன்மக்களைக் கவனிப்பார்களா? மறுஉலகு சென்றுவிட்டால் கவனிக்கமாட்டார்கள் என்பது உன் நினைவோ சொல்வாய். நண்பர் என்று சொல்லிக்கொள்பவர், உண்மையான நண்பர்களாயின், நீ உயிரோடு இருந்தாலும் இல்லாவிட்டாலும், கவனித்தே தீர்வர்.”

“எனவே சாக்ரிடீஸே உன்னை வளர்த்து ஆளாக்கிக் காப்பாற்றிய எங்கள்வார்த்தைக்குக் காதுகொடுத்திடு. உயிரையும் குழந்தைகளையும்பற்றிமுதலிலும்,நியாயத்தைப்பற்றிஇரண்டாவதாகவும்நினைப்பதை ஒழிப்பாய். கிரிட்டோ சொல்லும் வண்ணம் நீ செய்துவிட்டால், நீயாகட்டும், உனக்கு வேண்டியவர்களாகட்டும் இவ்வாழ்க்கையில் சந்தோஷமாகவும் நியாயமுள்ளவர்களாகவும்இருக்கமுடியாது; மறுமையிலும் சந்தோஷம் ஏற்படாது. இவ்வுலகை நீ இப்பொழுது துறப்பதால் நீ வருந்துபவனாகவும், நிராபராதியாகவும் இறக்கின்றாயே யல்லாமல், தீங்கு எதுவும் இழைப்பவன் ஆகமாட்டாய். சட்டத்திற்கு நீ பலியாகவில்லை; ஆனால் ஏதன்ஸ்நகர மாக்களின் பலியே நீ ஆகின்றாய். இப்பொழுது ஐய நீ, அவர் செய்த தீங்கிற்கு மறுதீங்கிழைக்கின்றாய் என்னும் நினைவில் எங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை உதறித்தள்ளிவிடுவாயானால் எத்தீங்கும் இழைத்திரா எங்கள்பால் தவறு இழைத்து நீ பிழைக்கும் பொருட்டு உன் நண்பர்க்கும், நாட்டிற்கும் பிழை புரிந்தனனாய் ஓடி விடுவாயானால் உன் மீது நாங்கள் கோபம்மிகக் கொள்வோம். எங்களது சகோதரர்களான பாதளலோகச் சட்டங்கள் நீ இறந்த பிறகும் உன்னை விரோதியைப்போல் கருதும். எங்களது செல்வாக்குப் பழுதுறும்படி நீ இது புரிந்தனை என்பதை அவைகள் அறியாமற் போகா. எனவே ஐய, எங்கள் சொல்லிற்கே காதுகொடு. உன் நண்பன் கிரிட்டோ செல்வதைக் கேளாதே”.

நண்பா இத்தொனிதான் இடைவிடாது என்காதில் தொனித்துக் கொண்டிருப்பதாக நான் உணர்கிறேன். யோகிகள் காதிலே இன்னிசைப் பண்கள் ஒலித்துக்கொண்டிருப்பதுபோல், என்காதிலும் இச்சட்டங்களின் சொற்களே இசைக்கலாகின்றன. வேறு ஒருவர் சொல்லையும் கேட்க முடியாதவனாக இருக்கின்றேன். ஆகவே நண்பா இனி நீ சொல்வதெல்லாம் வீணேயாகும். வேறு ஏதாவது சொல்ல இருந்தால் சொல்லலாம்.

கிரிட்டோ:—பெரியோய், நான் சொல்வதற்கொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

சாக்:—அப்படியானால் கடவுளுடைய சித்தம் காட்டும் அறிகுறியை நான் பற்றிப் பின்செல்லுமாறு என்னை இனி விட்டுவிடு.

முற்றிற்று

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[815-வது பக்கத் தொடர்ச்சி]

உரிமையா லிரக்கந் தீர்ந்த
உத்தமி யிவளே யேன்கோ!

ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரவர்களது உரை ஒருவழி நில்லாது ஊசலாடுகின்றது. அவர் ஓரிடத்தில் உரைத்தவண்ணம் சுல்கச் சூளின்படி கைகேயிவயிற்றுப் பிள்ளைக்கே தயரதன் தன்னரசை உரிமையாக்கி யிருப்பானாயின், அப்பரதன் சேணிடை அகன்றிருக்கு மமயத்தில் அவனது உரிமையைக் காக்குமாற்றால் கைகேயி தயரதனது வாய்மையைக் காக்குமொரு கருதரியவகையில் தன் கற்புக்கடனாற்றினள் என்றுரைப்பது அதன் வரையிலேனும் ஒருவாறு ஒக்கும். ஆனால், ஸ்ரீமான் பாரதியாரோ அவ்வொரு வழியையே பற்றி முழுதுந் தொடரவில்லையே. அரசன் அன்று தன் தேயத்தைக் கைகேயிக்கே அன்றோ சுல்கக்கொடையாக அளித்தனன் எனச் சிலவிடங்களில் வேறாக மாற்றியும் அவர் கூறக் காண்கின்றோம். கொடையின் வாசகம் இதுவெனக் கொண்டே ஸ்ரீமான் பாரதியார் அதற்குரிய வழக்கறத்தை வாதிக்கின்றனர். இப்படி இவர் மாறி மாறி உரைப்பதன் இரகசியம் சிறிது ஆழ்ந்து நோக்கினால் புலப்படும். “கெடுத்தொழிந்தனை” என்ற துவக்கத்துச் செய்யுளில் வரும் “ஒருமகற் கெனவே கொடுத்த பேரரசு” என்ற சொற்கள் அவர் உரையின்படி பரதனைக் குறித்தே பொருந்தவேண்டுமாயின், முன்னைநாள் தயரதன் சூளொடு ஈந்த தேயம் கைகேயியின் வயிற்றுதிக்கும் மகவிற்கேயாதல் இன்றியமையாததாகின்றது. பின்,

வரனி லுந்தைசொன் மரபினா லுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனில் நீபிறந் துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்க என்னவே

என்று இராமன் பரதனுக்குரைக்கும்போழ்தில், “உரனில் நீ பிறந்து உரிமையாதலால்” என்ற சொற்கள் பாரதியார் உரையின் பொருளிற்கு இணங்கவேண்டுமாயின், தயரதன் கொடை கைகேயிக்குப் பிறக்கலாகும் பிள்ளைக்கே அளித்ததா யமைதல்வேண்டும்

ஆதலாற்றான் ஸ்ரீமான் பாரதியார் பற்பல விடங்களில் பரதனையே தயரதனது சுல்கக் கொடைக்குப் பாத்திரமாக்க முயல்கின்றார். இது உண்மையாயின், வழக்கறமுறையின்படி பரதன் பிறந்தவுடன் கோசலதேசத்தின் எல்லாவுரிமைகளும் அவனையே சார்ந்து பற்றி நிற்க வேண்டும். தயரதன் ஆண்டிருந்த நாடெல்லாம் பரதனுக்கு உடைமையாய் விடும். "நீ பிறந்து உரிமையாயிற்று" என்று இராமன் எடுத்துக் காட்டியதும் ஏற்றதே என்றுரைக்கலாம். இராமனுக்குத் தயரதன் முடிசூட்ட முயன்றவந்நாள் உரிமையுடைய பரதன் அங்கு இல்லாமையால் இந்நற்றாய் அவன் கெட்டொழியா வண்ணம் தன் பொறுப்பிலே அவ்வுரிமையைக் காக்குங் கடனை மேற்கொண்டனள் எனக் கூறவும் ஒண்ணும். இன்னபடி அரசுரிமை பரதனை ஒருமுறை சார்ந்துவிட்டதெனின், பிறகு கைகேயிக்கு அதனில் எவ்விதஉரிமையும் உடைமையும் இல்லையென்பது சட்டம். இச்சட்டப்படி அப்பரதன் குலக்கோமைந்தர் தமக்கும் அவன் அடுத்ததம்பிக்கும்'வாரிசு கிரமத்தில், அரசு இறங்கவேண்டியது முறைமையாகின்றது. எனின், "அடுத்த தம்பி" என்றது உதாஜித்தைக் குறிக்குமா றில்லை. ஆனால் பாரதியாருக்கோ அவ்வாறு குறிக்கவேண்டியது அவசியமாகின்றது. அப்படிக் குறிப்பதற்கு, முன்னைய சுல்கக் கொடையாக அரசினைத் தயரதன் முழு உரிமையோடு கைகேயிக்கே அளித்ததாகக் கொள்ளல்வேண்டும். அப்பொழுதுதான் முழுவுரிமையும் அவளதே ஆகிநிற்க அவட்குப்பின் சுல்கக் கிரம வாரிசு முறையின்படி அவள் மைந்தனுக்கும், மைந்தனில்வழி தம்பிக்கும் அரசு நெறியாக இறங்க வல்லதாகின்றது. இந்நினைவு பற்றியே ஸ்ரீமான் பாரதியார், "நமது ஆராய்ச்சிக்கு இயைபுடைய 'சுல்கமோ' மகளிர்க்கு மணவாளர் மணக்குங்கால் விரும்பித்தரும் நிதியாம். இதிற் பெண்டிர் எல்லையிகந்த முற்றுரிமை உடையராவர். வரம்பிறந்த நிறையாட்சி, கொடையுரிமை எல்லாம் இதிற் பெண்டிர்க்குண்டு. உடைய மடவார்க்குப்பின் அவர்மக்கள் அடைதற்குரியவர். மக்களில்வழி அவர் கணவர் பெற்றோர்க்கின்றி, அவருடன் பிறந்த சோதரரே அவர் 'சுல்க' நிதியடைய முதலுரிமையுடையவர்", என்று எடுத்துக்காட்டுவாராகின்றனர். கைகேயிக்கு உரித்தாய அரசையே தயரதன் இதுகாறும் ஆண்டுக்கொண்டிருந்தானென இவர் கூறியு மிருக்கின்றனர்.

கோசல தேசம் கைகேயியின் உரிமைப் பொருளாயின் ஏதமொன்றும் யாருக்கும் நிகழாமல் அவளால் காத்திருக்க இயலுமே. அருள்நிறைந்த சிந்தையளும் கற்பரசியும் அவளாயின் தன்கொழுநன் உடல்நலிந்து மனமுளைந்து அவளடி வீழ்ந்து "வேண்டாய் வேண்டாய் இவ்வரம்" என்று வேண்டும்போது, 'தீயவையாவினும் சிறந்த தீயளாய்' நிற்காமல் அவள், "மன்னவா, நீ யியைந்தவாறு செய்க" என்று அருள்வதற்கு இடையூறு எங்குங் காண்கிலம். அரசு பரதனுடைய தாயின் அதனை விட்டுத்தரும் உரிமை கைகேயிக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால், ஸ்ரீமான் பாரதியார் அவ்விடத்தில் உரைத்தபடி, நிறையாட்சி கொடையுரிமை எல்லாமுடைய கைகேயியின் கைப்பொருளே இவ்வயோத்தியரசு ஆமாயின் 'கற்புடைய' கைகேயி இப்பொழுததனை வற்புறுத்தியதற்குக் காரணம்என் ? தன்னுரிமையை இரக்கமின்றி வற்புறுத்தலாம் என்பதொன்றே சட்டத்தின் முறையேயன்றி அவ்வுரிமையை வற்புறுத்தி வாங்கித்தான் தீரவேண்டுமென்ற விதியில்லை. ஆதலால் கைகேயி, வாளா விருந்திருக்கலாம். மன்னவன் அரசினை இராமனுக் களிக்கத் தானும் இசைந்திருக்கலாம். இதனால் அரசன் தன் வாய்மையைக் கொன்றவனாகமாட்டான். "என்னுடைய நாட்டை நீ இன்னொருவனுக்கு எடுத்தளிக்கின்றாய், இது நீதியோ" என்று இடித்துரைத்துப் பின், "ஆயினும், நீ இசைந்தபடி செய்யற்கு யான் உடன்படுகின்றேன்" என்றுதான் இவள் இயம்பி, அரசனை அவன் கண்ணிற்கே இழிந்தவனாகக் காட்டித்தான் தீரவேண்டுவதும் இன்றியமையாததன்று. இராமனைப் பயந்தவளாய்ப் பாவிக்கும் இவள், "நாயக, என் மைந்தன் இராமனுக்கே நன்முடி சூட்டுக" என்ற சொல்லால், ஒருவருக்குந் தீங்கிலாவகை புரிந்திருக்கலாமே. உரிமையுடையவர் அதனை வற்புறுத்தாமல் வாளாவிருத்தலின் பொருளும் அஃதே. விரியுஞ் சிந்தனையால் தன் மகனது ஆக்கத்தையும் அதனின்றும் தன் ஆக்கத்தையும் நாடிச் சூழும் மதியுடையவள் இப்பொழுது இக் கைகேயி அல்லளாயின், இராகவன் சீதையுடன் இருங்கானம் செல்லாமல், பேரரசன் தன்னடியில் வீழ்ந்து மாயாமல், 'மா கயத்தி' என்ற பழிக்குத் தான் ஆளாகாமல், எல்லோரும் எங்கும் இன்புற்றிருக்கும்வண்ணம் தன்னுரிமையை இனிதே விட்டுத்தந்து முடிபுனை திருவிழாவில் முற்றிலுங் கலந்துகொண்டு பின்னுள நெடுநாள் நல்லவாறு தானும் வாழ்ந்து, அல்லல்செய் அரக்கரால் இடும்பைகூர் அமரரைத்தவிர ஏனையோரையும் வாழ்வித்திருப்பாள். கூனியின்கூற்றினால் மயக்குண்டிராள்; பண்டைநாள் தன்மைந்தன் இராகவன் தொடங்கிய வேலையை முடித்தவளாய்க் கூனியின் கூன் நிமிர இக்கைகேயி புடைத்திருப்பின் இருக்கலாமேயன்றி வான்மீகி முனிவர் உரைத்தபடி, அக்கூனைக் கட்டித் தழுவிப் பாராட்டி ஆனந்தக் கூத்தாடி யிருக்கமாட்டாளே.

ஆதலின், உதாஜித்தை 'அடுத்த தம்பி' யாக்கும் பொருட்டுக் கைகேயிக்குச் சுல்கத்திற்குரிய முற்றுரிமையை ஸ்ரீமான் பாரதியார் அளிப்பது இத்தகைய விபரீதத்தை விளைவித்துநிற்கின்றது. இவ்விபரீதத்திற்குப் பயந்து, 'அடுத்த தம்பியாக" உதாஜித்தை ஆக்காமல் விட்டாலோ, 'ஒருமகன்' இராமனே யாகிவிடுகின்றான். அந்த ஒருமகனையோ பரதனுக்காவிட்டால் பின் பாரதியாருக்குப் பகர்வதற் கொன்றுமில்லை. இருதலைக் கொள்ளி இவ்வாறு இது இருப்பதாற்றான் அவர் இதனின்று வெளியேற முயல்கின்ற முயற்சியில், ஒருமுறை கைகேயிக்கும், மறுமுறை அவள் வயிற்றுதிக்கும் மைந்தனுக்கும் முன் வேந்தன் பேரரசு அளித்ததாக மாறிமாறிக் கூறவேண்டி நேர்கின்றது. கம்பரது கருத்தல்லாததொன்றை அவருக்குரிமையாக்கப் பார்ப்பதன் பயன்றானே இவ்விபரீதமாகத் தோற்றுகின்றதென ஐயுறத்துணிவதும் இயற்கையே.




# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அர்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

கிருமபோன்

சங்கீத கீர்த்தனும்ருதம்.



இதுபோது கிரும்போன் என்னும் விஞ்ஞான கருவியில்பாடிவரும்திருச்செந்தூர் ஷண்முகவடிவு எஸ். வி. சுப்பய்யா பாகவதர், டி. எம். காதர்பாட்சா, எஸ். ஆர். கமலம், பெங்களூர் தாய்,மிஸ்.கெ. ரங்கநாயகி, சேலம்அம்மாகண்ணு, திருவிடமருதூர் பவானி, தனுக்கோட்டியும் சகோதரியும், சுந்தரியும் வரலட்சுமியும், வி.சுப்ரமண்ய பாகவதர், பபூன் ஷண்முகம், A. S. ராசப்பா, கனகரத்தினமும் மாணிக்கமும், சேலம்கோதாவரி, லோகாம்பாள், பார்வதி அம்மாள், வி. சாரதாம்பாள், சிவக்கொழுந்து, வனஜாட்சி, வேதம்மாள், வீணை தனம் குமாரத்திகள், பிரம்மஸ்ரீ என். எஸ். துரைசாமி அய்யர், நியமம் நடராஜ பாகவதர், எ. சாமி நாயுடு, வைத்தியநாத பாகவதர், மற்றுமுள்ள ஸ்திரீ திலகங்களும் அரங்க மேடையில் குயிலோசையோ கார்தர்வ நாரதர் கிம்புருடர் தொனியோ என்று சந்தேகிக்கும் வண்ணம் தென்னுடெங்கும் அமிர்த மழை பொழிந்துவரும் மாஸ்டர் எஸ்-ஜி கிட்டப்பா, கே-பி சுந்தராம்பாள் முதலிய நடிக ரத்தினங்களுடைய முக்கனி ரசத்தையொத்த (670-பக்கங்களுக்கு மேற்பட்ட) கீர்த்தனை, விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய அரும்பெறும் பாடல்களை ஒருங்கே யமைத்து ராக தாளங்களுடன் பிளேட் நெம்பருடன் அழகியகிளேஸ்தாளில் அச்சிட்டுக்கண்ணைக்கவரத்தக்கபயிண்டுசெய்து எங்களிடம் சொற்ப விலைக்குத் தயாராக யிருக்கிறது.

தனி பாகம் ரு. 1-0-0. மூன்றுபாகம் கட்டடம் ரு. 2-8-0.

ஷண்முகானந்த புத்தக சாலை,
நயினியப்பநாயகன் தெரு, பி. டி. மதராஸ்.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
*Head Office:*-9, Old Court House St., Calcutta.

Insured for how much?
Is it sufficient?
Will it hurt you to make little sacrifices to pay your Life Insurance premium?
Can we satisfy you?

For Literature
Apply to :—
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

பிரசுரங்கள்.

சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. மூச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் கனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை புரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றன இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினேரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.



## வர்த்தமானம்

கெமால்பாஷாவின் தலைமையில் இதுவரையில் கட்சிப்பிளவு ஏதுமின்றித் துருக்கியில் குடியரசு முறை நடக்கலாயிற்று. சென்ற ஒரு வருடகாலமாய் அரசாங்கத்தில் அதிகாரம் வகிக்கும் செல்வாக்குடைய ராஜதந்திரங்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட, மெல்ல மெல்ல அது கக்ஷியாய் அகன்றது. இப்பொழுது துருக்கியில் பார்லிமெண்டுஜனங்கள்கக்ஷியொன்றும், பெதிபேயின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்குக் கக்ஷியும் இருந்துவருகின்றன. இவ்விரு கக்ஷியாருக்குள் விரோதமேற்பட 20 தினங்களாக அனடோலியாவில் கலகங்கள் நடந்து வருகின்றன. அனடோலியாவிலும், மாவலினுவிலும் போலீசார் ஆயுதங்களின் உதவிகொண்டு கூட்டங்களைப் பலமுறை கலைக்க நேர்ந்ததாம். இதுவரை 17 பேர்களுக்குக் காயமேற்பட்டுள்ள தென்றும், இருவர் இறந்தனர் என்றும் லிபரல் கக்ஷியின் தலைவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் துருக்கிச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

ஒலிம்பியாவில் சர்வதேச மோட்டார் காட்சியொன்று இம்மாதம் 16ந் தேதியன்று திறக்கப்பட்டது. அக்டோபர் மாதம் 25ந் தேதிவரையில் இக்காட்சிச்சாலை திறந்திருக்கும். இக்காட்சியில் 509 வகை மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. இவைகளில் 292 வகை வண்டிகள் பிரிட்டிஷாரால் செய்யப்பட்டவையாகும். மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யும் எல்லாத்தேசங்களும் இதில் கலந்துகொண்டிருக்கின்றன. இரண்டு சிலிண்டர் முதல் 12 சிலிண்டர் வரையிலுள்ள வண்டிகள் இருக்கின்றன. 100 பவுன் முதல் 2000 பவுன் விலையுள்ள பலவகை மோட்டார்கள் இருக்கின்றன. இந்த வண்டிகளின் வசதிகளை நோக்குங்கால் விலைகுறைவானவை யென்றே சொல்லவேண்டும். மோட்டார் படகுப் பிரிவு ஒன்று இக்காட்சியில் சேர்க்கப்பட்டுள்ளது. 50 பவுன் முதல் 1000 பவுன் வரையுள்ள மோட்டார்ப் படகுகள் இருக்கின்றன என்று ரக்பிச் செய்தியொன்று கூறுகின்றது.

***

இங்கிலாந்தில் இனி நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலை யொட்டி, அரசியல் கக்ஷியினர் தாங்கள் தாங்கள் வெற்றி பெற்று அரசாங்கத்தைக் கைப்பற்ற முயன்று வருகின்றனர். கன்ஸர்வெட்டிவ் கக்ஷியினர் அதிகாரத்திற்கு வந்தால் அக்கக்ஷியார் எக்கொள்கையுடன் வேலைசெய்வார்கள் என்பதுபற்றி மிஸ்டர் பால்டுவின் அறிக்கை யொன்றை வெளியிட்டிருக்கின்றார். அரசாங்க நிர்வாகத்தில் ஏற்படும் செலவைக் குறைப்பது இக்கக்ஷியார் கொள்கையில் மிகவும் முக்கியமான பாகமாகுமென்றும், ஜனங்களது வரிப்பளுவைக் குறைப்பதும், வேலையில்லாதார் இன்ஷியூரென்ஸ் முறையை வேலையிலாதார்க்கு அதிகப் பயன்தரும் வழியில் அமைப்பதும், கைத்தொழில்களுக்குக் காப்பு அளித்து அவை மிகமிகப்பெருகுமாறு செய்வதும், இக்கக்ஷியாரால் முதன்மையாகக் கவனிக்கப்படும் என்றும் கூறி, மேலும் விளக்குகின்றார்:— செயற்கைச் சாமான்கள் விஷயமாய் அன்னிய நாடுகளுடன் கலந்து யோசித்து, உற்பத்திசெய்யும் விஷயத்தில் ஒரு கட்டுபாடு இருந்தால்தான், உள்நாட்டு மார்க்கட்டைப் பாதுகாக்கவியலும். இப்படிச் செய்வதனுல் வேலையில்லாதார் இப்பொழுது படுங்கஷ்டம் இராது. மேலும் இந்த ஏற்பாட்டால் தொழிலாளரும் முதலாளியும் ஒருவர்பால் ஒருவர் நம்பிக்கையுடன் இருக்க வசதி ஏற்படலாம். ஏகாதிபத்தியப் பொருளாதார ஒற்றுமை ஏற்படும்வழியில் காரியங்கள் இடையூறில்லாது செய்யப்படவேண்டும். இங்கிலாந்தில்விளையும் கோதுமையில் ஒருபாதியாவது இங்கிலாந்திலே உணவுப்பொருள்களுக்கெனச் செலவழிக்கப்படல் வேண்டும். காப்புவரி முறையினுல் தடுக்கப்படவியலாத ருஷியநாட்டுக் கோதுமை அதிகம்இங்கு இறக்குமதியாகாமல் ஒருவாறு இம்முறை தடுக்கும். இறக்குமதிக் குறைவு ஏற்படும் வழி தேடுவது பல தொல்லைகளை நாட்டில் அகற்றிப் பொருளாதார அபிவிர்த்திக்குத் துணையாயிருக்கும்.

***

ஆப்கனிஸ்தானத்து அரசியல் நிலைமையைப்பற்றிப் பெஷாவர் செய்தி கூறுவதாவது:-நாதர்கான் மகுடாபிஷேக விஷயமான ஏற்பாடுகளில் இப்பொழுது மாறுதல் ஏற்பட்டுள்ளது ஆங்குக் கலகம் வலுத்துவருகின்றது என்பதைக் காட்டுவதாகும். ஆனுல் ஆப்கன் அரசாங்கத்தார் எதுவும் சொல்ல மறுக்கின்றனர். இப்ராஹிம் பெக் என்பவர் நாதர்கானுக்கு விரோதமாகப் படைதிரட்டி வருவதாகவும் தெரிகின்றது. இப்படையில் மலைச்சாதியினரும் பாச்சா சாக்கோவுடன் சேர்ந்திருந்த பலரும் கலந்துள்ளார்கள் என்றும் தெரிகின்றது.

***

தீபாவளி கங்காஸ்நான வினு:—

ஞானகங்கை தோய்ந்தான்ம நல்விளக்கம் பெற்ருயோ?
வானமிர்த முண்டு மகிழ்ந்தாயோ?—ஈனமுறு
கோபமவா வான கொடியபகை மாய்த்தனையோ ?
சோபன முற்ருயோநீ சொல் ? சுபம் !

பண்டிதர்—செ. ரா. கணபதிசுப்பிரமணிய அய்யர்,
போர்டு ஹைஸ்கூல், சத்தியமங்கலம்.

இனும்! இனும்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்ருத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனு பஜார், மதராஸ்.

Unique Philosophical Works !!! By
D. Gopaul Chetty, Late Editor, "New Reformer"

I. Chidambara Rahasyam Revealed
First book of its kind ever published PRICE RE. 1.

II. பதி பசு பாச விளக்கம் (மொழிபெயர்ப்பு) ரு. 1.
இந்நூலில் திரிபதார்த்தங்களின் தன்மைகளும் தொழிற்பாடுகளும் இதுவரையில் யாவராலும் கூறப்படாத நூதன வழியில் அதிசயிக்கும்படி விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. (504 பக்கங்கள் கொண்டது).

III. பரம இச்சா ஞான தீபிகை (குறைந்தவிலை)அ. 8.

Address Orders to :—D. GOPAUL CHETTY,
ROYAPETTAH, MADRAS.

18912 6

KALANILAYAM.
REG. NO. M. 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப்பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ” ” | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம்:—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சிமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
802, தங்கசாலை வீதி, மதராஸ்.



## தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. 1-0-0.

முத்தையா புக் டிப்போ,
தபால் பெட்டி 99, சென்னை.



## கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—“கலா நிலயம்”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)